A/L 91

பௌதிகவியல்:
திரு. சௌந்தி
செவ் - வியா - 1.00 மணி
இரசாயனவியல்:
திரு. செல்வா
செவ் - வியா - 2.00 மணி
தாவரவியல்:
திரு. பாலா
சனி - ஞாயிறு 4.30 மணி

நிரு ரியூசன் சென்ரர்,
கோண்டாவில்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ2/50

A/L 91

விலங்கியல்:
திரு. ஈசன்
திரு. ஞானம்
திங்கள்-வெள்ளி 4.30 மணி
தூய பிரயோக } கணிதம்
திரு. கிருஷ்ணு
சனி-ஞாயிறு 8.30 - 10.30 மணி

நிரு ரியூசன் சென்ரர்,
கோண்டாவில்.

சுடர்: 4 சுக்கில ஞூ வைகாசி மீ 03 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1409 ஷவ்வால் பிறை 10 (16 - 05 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-136

## ரஞ்சன் சிம்பாப்வே பயணம்

கொழும்பு, மே 16

வெளியுறவு அமைச்சரும் பாதுகாப்புத் துணை அமைச்சருமான ரஞ்சன் விஜேரத்ன நேற்று சிம்பாப்வே பயணமானுர்.

தலைநகர் ஹராரேயில் நடைபெறவுள்ள அணிசேரா இயக்க வெளியுறவு அமைச்சர் மாநாட்டில் கலந்து கொள்ளவே அமைச்சர் செல்கிறுர்.

இம் மாதம் 17 ஆம் திகதி முதல் 19ஆம் திகதி வரை இம் மாநாடு நடைபெறும். அமைச்சரான பின்னர் திரு. ரஞ்சன் விஜேரத்தினுவின் முதல்வெளி நாட்டுப் பயணம் இதுவாகும்.

ஏற்கனவே இந்திய வெளியுறவு அமைச்சர் பி. வி. நரசிம்மராவ் ஹராரே சென்றுள்ளார். (ஓ-எ)

## முஸ்லிம்கள் மீது தாக்குதல்

கொழும்பு, மே 16

பண்டாரவளை-குருத்தலாவ, இங்குருக பகுதியில் உள்ள முஸ்லிம் மக்கள் கடந்த சனிக்கிழமை இனந்தெரியாத நபர்களினுல் தாக்கப்பட்டனர் என்று முறையிடப்பட்டது.

காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களில் ஒருவர் மரணமானுர்.

அப்பகுதியில் பதினைந்துக்கும் அதிகமான வீடுகள் சேதமாக்கப்பட்டன. (ஓ-எ)

## 10 ஜவான்கள் உயிரிழந்தனர்

கொழும்பு, மே 16

மிருசுவிலில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் நடத்திய தாக்குதல் ஒன்றில் இந்திய அமைதிப் படையைச் சேர்ந்த பத்து ஜவான்கள் உயிரிழந்தனர் என்று இந்திய வானொலியும் பி.பி.சி. வானொலியும் அறிவித்தன.

இத்தாக்குதல் நேற்று முன் தினம் (ஞாயிறு) மாலை இடம் பெற்றது தெரிந்ததே. (ஓ-எ)

## மிருசுவிலில் வீடுகள் தீக்கிரை

யாழ்ப்பாணம் மே 16

மிருசுவில் பகுதியில் சில வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

தீ வைப்புச் சம்பவத்தை அடுத்து இப்பகுதியைச் சேர்ந்த சிலர் இடம் பெயர்ந்து சென்றுள்ளதாகத் தெரியவருகிறது.

## மலையக இளைஞர் எழுவர் விடுதலை

கொழும்பு, மே 16

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த ஏழு மலையகத் தமிழ் இளைஞர்களை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி கடந்த வெள்ளிக்கிழமை விடுதலை செய்தார்.

இந்த எழுவரும் மலையகத் தமிழர் விடுதலைக் கழகத்தின் உறுப்பினர்கள் என்று சொல்லப்பட்டது.

உரிய அதிகாரிகளுக்கு தகவல் அளிக்கத் தவறியது, வன்செயல்களில் ஈடுபட்டது ஆகிய குற்றச்சாட்டுக்களின் மீது இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். (ஓ-எ)

## அடிக்கடி வந்த ஹெலிகள்

யாழ்ப்பாணம், மே 16

நேற்று முன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) முழுவதும் காரைநகர் கடற்படைத் தளத்துக்கு ஹெலிக்கொப்டர்கள் வருவதும் போவதுமாக இருந்தன. காரணம் தெரியவரவில்லை. (ஓ)

# வீடமைப்புக் கடனை செலுத்தவேண்டியதில்லை

## உணவு முத்திரைக்காரருக்கு சலுகை

யாழ்ப்பாணம், மே 16

**1984 ஆம் ஆண்டின் பின்னர், வீடமைப்புக் கடன் பெற்றவர்களில், உணவு முத்திரை வைத்திருப்போர் 1983 செப்டம்பருக்குப் பின்னர், தமது கடனைத் திரும்பச் செலுத்தத் தேவையில்லை.**

**உணவு முத்திரை வைத்திருப்போருக்கு, சலுகை வழங்கும் விதத்தில், அவர்களின் கடன் தவணைப் பணம் 'செவன' நிதியிலிருந்து வீடமைப்பு அதிகார சபைக்குச் செலுத்தப்படும்.**

இத்தகவல் அடங்கிய சுற்று நிருபம் ஒன்று தலைமையகத்தில் இருந்து யாழ் வீடமைப்பு அதிகாரசபைக்குக் கிடைத்துள்ளது.

கடந்த 1984ஆம் ஆண்டில் இருந்து வீடமைப்பு அதிகார சபை பல்வேறு வகையான வீடமைப்புக் கடன்களை வழங்கி வந்தது.

இக்கடன்களைப் பெற்றவர்கள் மாதாந்தம் தவணை அடிப்படையில் கடனை மீளச் செலுத்தி வருகின்றனர்.

தலைமையகத்தில் இருந்து அண்மையில் கிடைத்த சுற்று நிருபத்தின் பிரகாரம்—

உணவு முத்திரை வைத்திருக்கும் எவரும் வீடமைப்புக் கடன் பெற்றிருந்தால், 31-8-88ஆம் திகதிக்குப் பின் செவன நிதியில்இருந்து கடன் பணத்தை அதிகாரசபைக்கு வழங்கப்படும்.

உணவு முத்திரை வைத்திருப்பவர் கடனை மீளச் செலுத்தத் தேவையில்லை. ஆயினும் 31-8-88க்கு பின்னர் குறிப்பிட்ட உணவு முத்திரை வைத்திருப்பவர், தமது முத்திரையை இழந்திருப்பின் அவருக்கு இச் சலுகை வழங்கப்பட மாட்டாது — என்பதாகும். (அ-3)

## கொக்குவில் சந்தியில் முகாம்

யாழ்ப்பாணம், மே 16

இந்திய அமைதிப்படையின் முகாம் ஒன்று கொக்குவில் சந்தியில் நேற்று முன்தினம் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

நாச்சிமார் கோவிலடியில் அமைந்திருந்த முகாம் மூடப்பட்டதை அடுத்தே இம் முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

## முச்சந்தி முரளி



வடமத்திய மாகாண வியாதி எல்லா இடத்துக்கும் பரவாமல் இருந்தால் சரிதான்......!

## மதிய உணவு திட்டத்துக்கு ரூ. 110 லட்சம் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், மே 16

யாழ் மாவட்ட பாடசாலைகளில் மதிய உணவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வட-கிழக்கு மாகாணசபை 110 லட்சத்து 90 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இத் தகவலை யாழ். பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி உதயனுக்குத் தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்திலுள்ள 45 கொத்தணிகளில் உள்ள 480 பாடசாலைகளில் கல்வி கற்கும் 2 லட்சத்து மூவாயிரத்து 720 மாணவர்களுக்கு மதிய போசனம் வழங்கப்படவிருக்கிறது. (ஓ-3)

## பலாலி ஆசிரிய மாணவர்களின் கவனத்திற்கு

யாழ்ப்பாணம், மே 16

கற்பித்தல் பயிற்சிக்காக பாடசாலைகளுக்குச் சென்றுள்ள பலாலி ஆசிரியர் கலாசாலை மாணவர்களை இன்று காலை கலாசாலைக்கு வருமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கலாசாலை அதிபர் இவ் வேண்டுகோளை விடுத்துள்ளார். (ஓ)

## விரிவுரைகள் ஆரம்பமாகின

யாழ்ப்பாணம், மே 16

யாழ். பல்கலைக்கழக முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான விரிவுரைகள் நேற்று ஆரம்பமாகின.

எனினும் முழுமையாக விரிவுரைகள் நடைபெறவில்லை எனத் தெரிகிறது. (ஓ-3)

## யாழ்-திருமலை பஸ் சேவை நடைபெறவில்லை

யாழ்ப்பாணம், மே 16

திருகோணமலை ஹொரவப் பொத்தானைப் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதன் காரணமாக யாழ்ப்பாணம்—திருகோணமலை போக்குவரத்துச் சேவைகள் நேற்று நடைபெற இல்லை.

ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை டிப்போவில்இருந்து திருமலைக்குச் சென்ற பஸ் ஒன்றும் ஹொரவப்பொத்தானையுடன் திருப்பி விடப்பட்டது.

பயணிகள் வவுனியாவில் தங்கிக் கொண்டதை அடுத்து அந்த பஸ் பருத்தித்துறைக்குத் திரும்பியது. (ஓ-10)

## மாணவர் விடுவிப்பு

யாழ்ப்பாணம், மே 16

கைது செய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இருவரும் விடுவிக்கப்பட்டனர்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களான மட்டக்களப்பைச் சேர்ந்த எம். பிறிம்ராஜ், வீ. ரவீந்திரன் ஆகிய இருவரும் சில தினங்களுக்கு முன்னர் அமைதிப் படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

தீவிர விசாரணையின் பின் இருவரும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

## கடத்தப்பட்ட ஜீப் மீட்பு

கனகராயன்குளம் பகுதியில் வைத்து கடந்த புதன்கிழமை கடத்தப்பட்ட ஜீப் வன்னிவிளாங்குளத்தில் மீட்கப்பட்டது.

இந்த ஜீப் முல்லைத்தீவு கச்சேரிக்குச் சொந்தமானது என்பது தெரிந்ததே.

மேற்படி கடத்தல் சம்பந்தமான விசாரணைகளை அமைதிப்படையினர் நடத்திவிட்டு ஜீப்பை மேல் விசாரணைக்காக ஸ்ரீ லங்கா பொலீஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (ஓ-94)

# நெடுங்கேணிப் பகுதியில் ஷெல்லடி இருவர் மரணம்; அறுவர் காயம்

வவுனியா, மே 16

கடந்த சனிக்கிழமை நெடுங்கேணியில்இடம்பெற்ற மோதலின்பின்னர் நடந்த ஷெல் தாக்குதல்களினுல் பொது மக்கள் இருவர் மரணமானுர்கள். அறுவர் காயமடைந்தனர்.

இதில் முதலாமவர் சம்பவம் நடந்த இடத்திலேயே துடிதுடித்து மரணமானுர். அடுத்தவரான பொன்னையா வேலு (52 வயது) என்பவர் வவுனியா ஆஸ்பத்திரியில் மரணமானுர்.

சம்பவம் நடந்த இடத்திலேயே பலியானவர் நெடுங்கேணி-ஒட்டுசுட்டான் வீதியில் உள்ள இந்திய அமைதிப் படை முகாம் அமைந்துள்ள இறம்பைக் குளம் பகுதியைச் சேர்ந்தவர் எனக் கூறப்படுகின்றது.

காயமடைந்தவர்கள் நெடுங்கேணி-புளியங்குளம் வீதியில் உள்ள சூடுவெந்தான் என்ற இடத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர்கள் விவரம் வருமாறு:-

நாகராசா சூட்டி (23வயது) 2 பிள்ளைகளின் தாய் எஸ். ரஞ்சித் (19 வயது) வேலு பழனியம்மா 45 வயது (8 பிள்ளைகளின் தாய்-வவுனியா ஆஸ்பத்திரியில் மரணமான வேலுவின் மனைவி) மூர்த்தி நந்தினி (25 வயது) பொன்னையா சூரிய குமார் (12 வயது).

ஷெல்லடி, துப்பாக்கிப் பிரயோகங்களை அடுத்து நெடுங்கேணி நகரைச் சேர்ந்த சில குடும்பங்கள் பாதுகாப்பு கருதி வெளியேறியபோதிலும் பலர் வெளியேறமுடியாமல் இருந்ததாகவும் சனிக்கிழமை மாலை வரை இங்கு பதற்றம் நிலவியதாகவும் தெரியவந்துள்ளது. (ஓ-164)

## யாழ். மாநகரசபையின் அபிவிருத்தித் திட்டங்களை யுனிசெப் குழு பார்வையிடும்

''யுனிசெப்'' அமைப்பைச் சேர்ந்த குழுவினர் யாழ்-மாநகரசபையின் அபிவிருத்தித் திட்டங்களை எதிர்வரும் 18ஆம், 19ஆம் திகதிகளில் பார்வையிடவிருக்கின்றனர்.

யாழ்-மாநகரசபை ஆணையாளராகப் பொறுப்பேற்றுள்ள திரு. பொ. பாலசிங்கத்துடன் இக்குழுவினர் திட்டங்களைப் பார்வையிடுவார்கள்.

வியாழக்கிழமை யாழ்-மாவட்ட வீடமைப்பு அதிகாரசபை, சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகம், திருநெல்வேலி நீர்விநியோகத் திட்டம் நாவாந்துறை வசந்தபுரம், ஆகிய இடங்களுக்கும், வெள்ளிக்கிழமை தாய்-சேய் நிலையம், குருநகர், துண்டி, அரியாலை சுகாதார பயிற்சி நிலையம், திட்டி ஆகிய இடங்களுக்கும் குழு விஜயம் செய்யும். (ஓ-3)

சுபநேரம்
16—05—1989
வைகாசி—3
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:
10. 23 முதல் 11. 53 வரை
ராகுகாலம்:
02. 53 முதல் 04. 23 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

# வடமத்திய மாகாணத்தில் பஸ் சேவை ஸ்தம்பிதம்

## ஊழியர் வேலைநிறுத்தத்தால்

வவுனியா, மே 16

வடமத்திய மாகாணத்தைச் சேர்ந்த நான்கு இ. போ. ச. டிப்போக்களின் ஊழியர்கள் காலவரையறையற்ற வேலை நிறுத்தத்தில் தங்கியுள்ளார்கள் இந்த வேலை நிறுத்தம் கடந்த சனிக்கிழமை ஆரம்பம் ஆகியது.

★ பதவிஉயர்வுகள், சம்பள அதிகரிப்புகள் வழங்கப்பட வேண்டும்.

★ ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் சலுகைகள் வழங்கப்படவேண்டும்.

இந்தக் கோரிக்கைகளை முன்வைத்து அனுராதபுரம், கெக்கிராவை, காட்டுக்கஸ் திரியா, கெப்பிட்டிகொல்லாவ ஆகிய இ.போ.ச. டிப்போக்களைச் சேர்ந்த ஊழியர்களே வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

இதனுல் பிரஸ்தாப டிப்போக்களினுல் நடத்தப்படும் பஸ் சேவைகள் யாவும் ஸ்தம்பிதமடைந்துள்ளன. வவுனியாவுக்கும் அனுராதபுரத்திற்கும் இடையிலான இ.போ.ச. சேவைகளும் நடைபெறவில்லை. எனினும் வவுனியா இ.போ.ச. டிப்போவின் ஒரு பஸ் மதவாச்சி வரையிலும் சேவையில் ஈடுபட்டுள்ளது.

தனியார் பஸ்சேவைகளிலும் வடபகுதி இ. போ. ச. டிப்போக்களின் பஸ்சேவைகளும் அனுராதபுரத்திற்கு ஊடாக வழமை போல நடைபெறுகின்றன. (அ-164)

## அரண்கள் புதுப்பிப்பு

வடமராட்சி, மே 16

வல்வெட்டித்துறை ஊரிக்காட்டிலுள்ள ஸ்ரீலங்கா இராணுவத்தினர் பாதுகாப்பு அரண்களைப் புதுப்பிக்கத் தொடங்கியுள்ளனர்.

மண்மூடைகளாலும், 'கொங்கிரீட்' கற்களாலும் அவை புதுப்பிக்கப்படுகின்றன. (ஓ-160)

## யாழ். குடாநாட்டில் பாடசாலைகள் ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், மே 16

நேற்று யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள பாடசாலைகளில் பெரும்பாலானவை இயங்கவில்லை.

நேற்று திங்கள் முதல் எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமைவரை பாடசாலைகளைப் பகிஷ்கரிக்குமாறு விடுக்கப்பட்ட அழைப்பு ஒன்றைத் தொடர்ந்தே நேற்றுப் பாடசாலைகள் ஸ்தம்பித்தன.

நகரில் உள்ள பல பாடசாலைகளுக்கு மாணவர்கள் சமூகமளிக்கவில்லை.

ஒரு சில பாடசாலைகளில் குறைந்த எண்ணிக்கையான மாணவர்கள் வந்திருந்தனர். ஆயினும் சொற்ப நேரத்தில் அவர்கள் வீடு திரும்பினர்.

ஆசிரியர்களும் பாடசாலைகளுக்குச் சென்றுவிட்டு, மாணவர் வரவு இல்லாமையால்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## வவுனியாவில் உள்ள பழைய பொலீஸ் நிலைய கட்டடம் அமைதிப்படை வசம்

வவுனியா மே, 16

வவுனியா நகரில் அமைந்துள்ள பழைய பொலீஸ் நிலைய கட்டடம் இந்திய அமைதிப் படையினரால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது.

இக்கட்டடத்தில் அமைந்திருந்த இலங்கைப் பொலீஸாரின் பொலீஸ் நிலையம் சில வருடங்களுக்கு முன்னர் முற்றவெளி மைதானத்தில் அமைந்துள்ள நகரசபைக் கட்டடத்திற்கு மாற்றப்பட்டது என்பதும்-

அதைத் தொடர்ந்து இந்தக் கட்டடம் வவுனியா நகரசபையின் மின்சாரப் பகுதிக்குச் சொந்தமான களஞ்சியமாக பயன்பட்டு வந்தது என்பதும் தெரிந்ததே.

இப்போது இதனை படையினர் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து இக்கட்டடத்தின் முன்புறமும், சுற்றுப்புறங்களும் சுத்தமாக்கப்பட்டு வெளியாக்கப்பட்டுள்ளது. [ஓ-164]

## தூர இடங்களுக்கான போக்குவரத்து பாதிப்பு

யாழ்ப்பாணம், மே 16

நேற்று யாழ். நகரிலிருந்து தூர இடங்களுக்கான பஸ் சேவைகள் எதுவும் நடைபெறவில்லை.

இங்கிருந்து சென்ற வாகனங்கள் அனைத்தும் கொடிகாமத்துடன் திரும்பி வந்தன.

கொடிகாமத்திற்கு அப்பால் ஊரடங்கு அமுல் செய்யப்பட்டுள்ளதாகச்சொல்லிஅமைதிப்படையினர் தொடர்ந்து பயணம் செய்ய அனுமதிக்காததை அடுத்தே போக்குவரத்துகள் ஸ்தம்பிதமாகின என்று அறிய வந்தது. இதேவேளை வெளியிடங்களிலிருந்து வந்த வாகனங்கள் எழுதுமட்டுவாளில் தடுத்து வைக்கப்பட்டன

சில வாகனங்கள் பளைஊடாகத் திரும்பி அல்லிப்பளை, கிளாலி, கச்சாய் வழியாக சாவகச்சேரிக்கு வந்து பயணத்தைத் தொடர்ந்தன.

மாலை 3-00 மணியின் பின்னரே கண்டிவீதி ஊடாக போக்குவரத்து அனுமதிக்கப்பட்டது. ஆயினும் வெளியிடங்களிலிருந்து வந்த வாகனங்கள் பல ஏற்கனவே திரும்பிச் சென்றுவிட்டன. (அ-9-10)

## சாவகச்சேரி, கொடிகாமத்தில் நேற்று ஹர்த்தால்

சாவகச்சேரி, கொடிகாமம் பகுதிகளில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

சாவகச்சேரி நகரில் உள்ள அனைத்து வியாபார நிலையங்களும் மூடப்பட்டிருந்தன.

கொடிகாமத்தில் நேற்று சந்தை தினமாக இருந்த போதிலும் சந்தையும் கடைகளும் மூடப்பட்டே இருந்தன. சந்தை வியாபாரிகள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

மிருசுவில் பகுதியும் வெறிச்சோடிய நிலையில் இருந்தது. (ஓ-117)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

T. V. Fridge, Fan, Cycle Oven, Motor 3/4, Hose power பாவித்த செற்றி புதிய தளபாடங்கள் கழிவு விலையில்: ஸ்ரீராம், பருத்தித்துறைவீதி, கல்வியங்காடு. (10930)

### FOR SALE

National T. V. 20'' color Grundig T.V 20'' General T.V 14'' N. E. C, T.V 17'' B/W - National X/V 390 Deck J. V. C Deck model H. R. 3330 S. T. L Video, Club No. 3, Model Market Thirunelvely. (522)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Hyline, வெள்ளை, கறுப்பு பேட்டுக் குஞ்சுகள், கறுப்பு சேவற் குஞ்சுகள் 16-05-89 இலும் Golden comet பிறவுண் பேட்டுக்குஞ்சுகள், சேவற் குஞ்சுகள், 17-5-89 இலும் Hisex பிறவுண் பேட்டுக்குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் 18-5-89 இலும் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (10939)

### கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

(Dekalb பிறவுண் பேடு சேவல் குஞ்சுகள், கறுப்பு சேவல் குஞ்சுகள் (C bb) புரொயிலர் குஞ்சுகள் (16-5-89) செவ்வாய்க் கிழமை விநியோகிக்கப்படும். பிறவுண் சேவல் குஞ்சுகள் 50க்குமேல் எடுப்பவர்களுக்கு விலை ரூ3/50. முன்கூட்டியே பதிவு செய்க. இல:9 கந்தையா லேன், சுன்னாகம் (புகையிரத நிலையத்திற்கு அண்மையில்) (392)

### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும் தமிழ் ஆங்கில ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி/2433]

### SPOKEN ENGLISH

புதிய பிரிவு ஆரம்பம் 22-5-89 திங்கள், புதன் நாட்களில் நேரம் காலை 6 மணி — 7½ மணி வரை S. B. Iyar 12, வைமன் வீதி, நல்லூர். [10838]

### தேவை

எமது தேநீர்ச்சாலைக்கு பிட்டு, இடியப்பம் போன்ற பலகாரங்கள் தயாரித்து சமையல் செய்யக்கூடியவர் உடன் தேவை. தொடர்பு: R. R., சந்திரன், வஜூஜ் ஒட்டல் சிவன்கோவில் வீதி, திருநெல்வேலி. (10938)

### ADVANCED ENGLISH

புதிய பிரிவு ஆரம்பம் 20-5-89 சனி, ஞாயிறு நாட்களில் நேரம் பகல் 10.30 - 12.00 மணி. S. B. Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். [10837]

### 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில்

மேற்படி பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தமிழ் மொழியில் அதிக புள்ளிகள் பெறவும் வசதியான பாடசாலையில் அனுமதி கோரவும் வழிசெய்யும் கட்டுரைத் தேன் துளி 60. ஆக்கம்: க. சொக்கலிங்கம் M.A. உயர் கல்விப் பதிப்பக வெளியீடு. விலை ரூபா 17/50. புத்தகசாலைகளில் கிடைக்கும். (10883)

### NEW CITY TRADERS

Daytron T. V 12'', 14'' B & W 14'', 20'' கலர் Phillips 20'' Gas Cooker, Hotplate, Booster, T. V Antennas Pipe fan& றேடியோ வீடியோ கசெற் ரெக்கோடர் ஒடியோ வீடியோ கசெற், Head, T.V stand, Film roll கவர், கை மணிக்கூடுகள் மற்றும் ஆடம்பரப் பொருள்களுக்கும் New City Traders 135, Kasturiar Road, Jaffna. [C/2505]


## சாரணருக்குப் பாராட்டு

பளை மகா வித்தியாலய சாரணர் குழுவினால் இந்த ஆண்டுக்குரிய நாட்குறிப்பு வெளியிடப்பட்டதற்கு ஜனாதிபதியும் இலங்கையின் பிரதம சாரணருமாகிய ஆர். பிரேமதாசா வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளார்.

அகில இலங்கை சாரணர் பயிற்சிக் குழுச் செயலாளர் ஜீ ஜீ. வில்சன் தமது வாழ்த்துச் செய்தியில் சாரணர் குழு இப்படியான முன்னேற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பது சிறந்த அம்சம் எனக் குறிப்பிட்டுள்ளார். [சு-117]


C. I. M. A
Stage I

A. A. T
Prelim

I. D. P. M
part I
&

I. A. B
Foundation

27th May 1989

C. I. M. A
Stage II & III

A. A. T
Inter & Finals

I. D. P. M
Part II
&

I. A. B
Inter & Finals

3rd June 1989

GROUP

**North Ceylon Technical Institute**
14, St. Peters Lane,
Hospital Road,
JAFFNA.

[C-2579]


## கண்ணீர் அஞ்சலி

தமிழ் சுருக்கெழுத்தின் தந்தை
**திரு. சி. இராமலிங்கம்**
(முன்னாள் சுருக்கெழுத்து/தட்டச்சு (தமிழ்) போதனாசிரியர், யாழ்ப்பாணம் / சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரி, அரச கருமமொழித் திணைக்களம்)

அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலி.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக
அவரது குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்கள்.

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்
(495)

### விவசாய விஸ்தரிப்பு உத்தியோகஸ்தர்கள்

# பதவி மாற்றப்பட்டாலும் விவசாய விஸ்தரிப்பு பணிகளையும்மேற்கொள்ளவேண்டும்

யாழ்ப்பாணம் மே 16

யாழ். மாவட்டத்தில் கிராம சேவையாளர்களாக நியமிக்கப்படும் விவசாய விஸ்தரிப்பு உத்தியோகஸ்தர்கள் விவசாயத்திணைக்களத்தில் இருந்து உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு விடுவிக்கப்பட்டாலும் அவர்கள் தொடர்ந்து விவசாய விஸ்தரிப்புப் பணிகளையும் மேற்கொள்ளவேண்டும்.

விவசாயத் திணைக்களத்தின் கீழ் விவசாய விஸ்தரிப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்த 50 விவசாய விஸ்தரிப்பு உத்தியோகஸ்தர்கள் கிராம சேவையாளர்களாக இம்மாத இறுதியில் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு விடுவிக்கப்படவிருக்கின்றனர்.

விவசாய விஸ்தரிப்பு உத்தியோகஸ்தராகக் கடமையாற்றிய பிரிவிலேயே இவர்கள் கிராம சேவையாளர்களாகக் கடமையாற்றுவார்கள் என்றும் அப்பணியுடன் அவர்கள் விவசாய விஸ்தரிப்பு பணிகளையும் தொடருவார்கள் என்றும் அவர்களுக்கான அலவன்ஸ், பிரயாண அலவன்ஸ் ஆகியவற்றை விவசாயப் பகுதியே தொடர்ந்தும் வழங்கும் என்றும் இவற்றுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஜனசக்தி திட்டத்தை நடைமுறைப்படுத்தவே இவர்கள் கிராமசேவையாளர்களாக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# இலங்கைக் கடற்படைக்கு சீனக் கப்பல்கள்

இலங்கைக் கடற்படைக்கு பலரக கப்பல்களை வழங்க சீன அரசு சம்மதித் திருக்கிறது.

அது பற்றிய விவரங்கள் இன்னும் முடிவாக்கப்படவில்லை.

சீனக்கடற்படையின் உயர்மட்டக் குழு ஒன்று இது சம்பந்தமான இறுதிக் கட்டப் பேச்சுக்களை நடத்த விரைவில் கொழும்பு வரவிருப்பதாக அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

சீனக்குழு கொழும்பு வருவதற்கு முன்னர் இது சம்பந்தமான பேச்சுக்களை விரைவில் முடித்துக் கொள்ள இலங்கைக் குழு ஒன்று பீகிங் செல்லும் சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்றும் அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

அண்மையில் பிரதமர் டி. பி. விஜேதுங்க பீகிங் சென்று சீன அரசுத் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்தியிருந்தார் அல்லவா!

அப்போது நவீனமய வசதிகள் கொண்ட கடற்படைக் கப்பல்களைத் தந்து உதவும்படி பிரதமர் விஜேதுங்கா சீன அரசைக் கேட்டிருந்தார்.

1971 தீவிரவாதக் கிளர்ச்சிக்குப் பின்னர் சீன அரசு 5 பீரங்கிப் படகுகளை இலங்கைக்கு வழங்கியது. பின்னர் இரண்டு பீரங்கிப் படகுகளை சீனா வழங்கியது. (இ-எ)

### இத்தாலியில் இறந்த பின்

## மாறிச் சென்ற சடலம் 3 வாரங்களின் பின் வந்தது!

யாழ்ப்பாணம், மே 16

கடந்த மாதம் 23ஆம் திகதி இத்தாலியில் இறந்தவரின் சடலம் அவரது சொந்த ஊரான கொக்குவிலை நேற்று முன்தினமே வந்தடைந்தது.

இவரது சடலத்துக்குப் பதிலாக இத்தாலியர் ஒருவரின் உடல் தவறுதலாக அனுப்பப்பட்டதும், பம்பாயில் அது கண்டுபிடிக்கப்பட்டு கடந்த நான்காம் திகதி மீண்டும் இத்தாலிக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டதும் தெரிந்தவையே.

இத்தாலியரின் உடலைஇங்கே அனுப்பிய இத்தாலிய ஆஸ்பத்திரி நிர்வாகிகள் இலங்கையரான கொக்குவில்வாசியின் உடலை இறந்த இத்தாலியரின் வீட்டுக்கு அனுப்பி இருந்தனர்.

இந்தத் தவறு கண்டுபிடிக்கப்பட்டு இலங்கையரான கொக்குவில் வாசியின் உடல் வந்துசேர மூன்று வாரங்கள் சென்றுள்ளன.

இறந்தவர் கொக்குவில் உடையார் ஒழுங்கையைச் சேர்ந்த கனகரத்தினம் சுந்தரலிங்கம், வயது 48. இத்தாலியில் பணிபுரிந்தபோது நோய் கண்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார். (இ)

## ஆலயம் புனருத்தாரணம்

அச்சுவேலி, மே 16

இடைக்காடு புவனேஸ்வரி அம்பாள் ஆலயம் 5 லட்சம் ரூபா செலவில் புனருத்தாரணம் செய்யப்படுகின்றது.

புனருத்தாரண வேலைகளை இடைக்காடு - அச்சுவேலிப் பகுதி பொதுமக்களின் ஒத்துழைப்புடன் புவனேஸ்வரி அம்பாள் ஆலய திருப்பணிச் சபை மேற்கொண்டு வருகிறது. [க-11]

# யாழ். தியேட்டர் ஊழியர்களுக்கு வாழ்க்கைச் செலவு புள்ளி அடிப்படையில் சம்பளம்

### ஐக்கிய சினிமா ஊழியர் சங்கம் அறிக்கை

யாழ்ப்பாணம், மே 16

யாழ்ப்பாண தியேட்டர்களில் கடமை புரியும் ஊழியர்களுக்கு சம்பள நிர்ணய சபையின் வாழ்க்கை செலவு புள்ளி அடிப்படையில் சம்பளத்தை வழங்க யாழ்ப்பாண தியேட்டர் திரைப்படம் திரையிடுவோர் சங்கம் ஒப்புதல் அளித்துள்ளது.

ஐக்கிய சினிமா ஊழியர் சங்கம் விடுத்த அறிக்கையில் மேற் கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சங்கம் தம் ஊழியர்கள், குறைபாடுகள் சம்பந்தமாக வருடாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானங்களை யாழ்ப்பாண தியேட்டர் திரைப்படம் திரையிடுவோர் சங்கத்துக்கு அனுப்பியிருந்தது.

திரையிடுவோர் சங்கம் ஒப்புக் கொண்ட விடயங்கள் சில வருமாறு:-

★ 1983 / 84 இல் வேலை இழந்த சகல தொழிலாளர்களுக்கும் வேலைவழங்கப்படும்.

★ வைத்திய லீவு, வருடாந்த லீவு, சமயாசமய லீவு வழங்கப்படும்.

★ தினசரி எட்டுமணித்தியாலயத்துக்கு மேல் வேலை செய்தால் மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும்.

★ ஊழியர் சேமலாப நிதி பாக்கியுடன் கட்டப்படும். ஊழியர் நம்பிக்கை நிதியும் கட்டப்பட வேண்டும்.

### கட்டடத்துறையில்

## பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை பெற்றுத்தர முயற்சிப்பேன்

### பட்டமளிப்பு விழாவில்பொறியியலாளர் உரை

மானிப்பாய், மே 16

''ஆசிய அபிவிருத்தி வங்கி 9கோடியே 70 லட்சம் ரூபாவை கல்விப்புனருத்தாரண வேலைகளுக்காக வழங்கி உள்ளது.

இந் நிதியைக் கொண்டு பாதிப்படைந்த சகல பாடசாலைகளும் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன. இப்புனரமைப்பு வேலைகளை மேற்பார்வை செய்ய எமது திணைக்களத்தில் பத்து அதிகாரிகள்தான் உள்ளனர்.

எனவே, இங்கு கட்டடத்துறை பயிற்சியை முடித்துக் கொண்ட சகலருக்கும் கல்வித் திணைக்களத்தில் கட்டட மேற்பார்வையாளர் நியமனம் பெற்றுத்தர நடவடிக்கை மேற்கொள்வேன்.''

மானிப்பாய் இந்துக் கல்லூரி முறைசாராக் கல்விப் பீட பட்டமளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்ப்பாணம் கல்விப்பணிமனை பாடசாலைகள் கட்டட வேலைப் பொறியியலாளர் திரு. எம். ஏ. பிரான்சிஸ் இவ்வாறு கூறினார்.

மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் திரு. எஸ்,வி. மஹேசவேலு தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம விருந்தினர் திரு. எம். ஏ. பிரான்சிஸ் தகுதி பெற்றவர்களுக்கான பட்டச் சான்றிதழ்களை வழங்கினார்.

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்கள தொழில்நுட்பக் கல்வி அதிகாரி [illegible] சுப்பிரமணியம் [illegible] தினராகக் கலந்து கொண்[illegible]

உரையாற்றுகையில் முறைசாராக் கல்வித் திட்டத்தின் கீழ் தொழில் திறன் பயிற்சி பெறுபவர்கள் பயிற்சியின் பின் சுயமாக ஒருவேலையை எளிதில் தேடிக் கொண்டு தமக்கும் நாட்டுக்கும் பொருளாதார வளர்ச்சியைத் தேடித் தர முடிகிறது.

இங்கு நீங்கள் பெற்ற பயிற்சி வெறும் சான்றிதழ்களை வழங்கும் பயிற்சியோ, படம் வரையும் பயிற்சியோ அல்ல.

அறிவு, செயல் திறன், மனப்பாங்கு ஆகியவற்றை கலந்து இப் பயிற்சியை நாம் தரும்போது அது ஒரு முழுமை பெற்ற பயிற்சியாகின்றது.

அண்மையில் நாம் மேற்கொண்ட ஓர் ஆய்வின்படி இப்பயிற்சி பெற்றவர்களில் 60% மாணவர்கள் சுயமாகவே ஒரு தொழிலைத் தேடியுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஒரு மாணவருக்கு எட்டு மாதங்களில் மேற்படி பயிற்சியை அளிக்க ஆயிரம் ரூபாவை எமது திணைக்களம் செலவிடுகின்றது.

இவ்வளவு செலவழித்து பயிற்சி பெற்றவர்களின் செயல்திறன் வீண்விரயமாகி விடாது அவர்களை நாம் பின் தொடர வேண்டி உள்ளது.

அவர்கள் தொழில் ஒன்றைத் தேடிக் கொள்ள வழி காட்டுவதே எமது நோக்கம். இதற்கென கல்வித் திணைக்களத்தில் தொழில் வழிகாட்[illegible]

இப்படி அவர் கூறினார்.

## வவுனிக் குளத்தில் செங்கட்டி தொழிற்சாலை

மாங்குளம், மே 16

படித்த இளைஞர்கள் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் நோக்கமாக வவுனிக்குளம் கிராம சேவக அலுவலர் பிரிவைச் சேர்ந்த திரு. கதிரவேல் தனது முயற்சியினால் ஜனசக்தித் திட்டத்தின் கீழ் செங்கட்டித் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பித்துள்ளார்.

வன்னி விளாங்குளம் கிராம சேவை அலுவலர் திரு. கே. விஜயகுமார் தொழிற்சாலையை ஆரம்பித்து வைத்தார்.

பத்து இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. [ச-94]

## தொலைபேசித் தொடர்பு

முல்லைத்தீவு, மே 16

முல்லைத்தீவிலிருந்து பிற இடங்களுக்குத் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்வதற்கான சகல வேலைகளையும் முல்லைத்தீவில் தொலைபேசித் தொடர்புத் திணைக்களம்மேற்கொண்டுவருகிறது.

விரைவில் தொலைபேசித் தொடர்பு ஆரம்பமாகுமென அதிகாரி கூறினார். (க-92)

## வீட்டுத் தோட்டப் போட்டி முடிவு

புங்குடுதீவு, மே 16

புங்குடுதீவு கமநலசேவை நிலையத்தால் நடத்தப்பட்ட வீட்டுத் தோட்டப் போட்டியில் சுமார் 200க்கு மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

இப்போட்டிகளை புங்குடுதீவு கமநல சேவை நிலையப் பெரும்பாக உத்தியோகத்தர் செல்வி பி. இராமநாதனும் விவசாயப் போதனாசிரியர் திரு. த. பசுபதியும் நேரிற்சென்று பார்வையிட்டு மதிப்பீடு செய்தனர்.

போட்டியில் நெடுந்தீவு 5ஆம் வட்டாரத்தைச்சேர்ந்த திரு. க. த. நாகேந்திரன் முதலாம் இடத்தையும், புங்குடுதீவு 11ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஆசிரியர் ச. சதாசிவம் இரண்டாம் இடத்தையும். நயினாதீவு 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திரு. ந. இரகுப்பிள்ளை மூன்றும் இடத்தையும் பெற்றுக்கொண்டனர். இவர்களுக்குத் தலா 1000/- ரூபா, 500/-ரூபா, 250ரூபா பரிசாக வழங்கப்பட்டது. [க-13]1

## பொலீஸ் அத்தியட்சகர்

யாழ்ப்பாணம், மே 16

யாழ். மாவட்ட பொலீஸ் அத்தியட்சகராக திரு. ரி. கே ஜெயராஜன் நியமிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு பொலீஸ் தலைமை அலுவலகத்தில் பொலீஸ் அத்தியட்சகராகக் கடமையாற்றிய இவர் 8 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் பதவியை பொறுப்பேற்றுக் கொண்டார்.

ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் பொலீஸ் அத்தியட்சகராகக் கடமையாற்றிய திரு. எஸ். சற்குணராசா கொழும்பு தலைமையலுவலகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். [க-10]

## றெட்பானா உதவி

முல்லைத்தீவு, மே 16

குமுழமுனையைச் சேர்ந்த 550 குடும்பங்களுக்கு விவசாய உபகரணங்கள் சமையல் பாத்திரங்கள் ஆகியவற்றை முல்லை மாவட்ட றெட்பானா ஸ்தாபனத்தினர் வழங்கினர். [க-92]

## ஓராண்டு நினைவஞ்சலி



**திரு. நாகமணி பொன்னுத்துரை**
('நிப்போன்' தேவிபிளாசா பில்டிங் உரிமையாளர்)

தோற்றம்: 02-01-1940 மறைவு: 26-05-1988

பாசமாய் நின்று பரிவுடனே ஆதரித்தீர்
காலமெல்லாம் உமது நினைவுடனே
காத்திருப்போம்
நீர் சென்ற இடம் ஏதோ?
சிந்தித்துப் பார்க்க முடியவில்லையே!

ஓடிவிட்டது ஆண்டொன்று
உன் உயிர் வீழ்ந்த
சிவந்த இடம் நிறம் மாறுதையா!
ஆனால் நீர் சிந்திவிட்டுச் சென்ற
சிரிப்பலைகள் எம்மை தினம் தினம் வாட்டுதையா!

கோடிகள் குவிந்தாலும்
கோபுரங்கள் உயர்ந்தாலும்
உன் நினைவலைகள் எம்மைவிட்டு அகலாது!
உங்கள் ஆத்மா ஈசன் இணையடி
நிழலில் இன்புற்றிருக்கப் பிரார்த்திப்போமாக!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

அன்பு மனைவி, அன்பு மகன்.

(C/2485)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில் அடகு நகைகள்

## விரைவில் மீளளிப்பு

மாங்குளம், மே 16
மாங்குளம் முல்லைத்தீவு மக்கள் வங்கியில் வைத்த அடகு நகைகள் விரைவில் மீளளிக்கப்படவுள்ளன.

மாங்குளம் முல்லைத்தீவு வங்கியில் அடகு வைத்த நகைகள் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வவுனியா மக்கள் வங்கிக்கு வந்து சேரவுள்ளன.

அடகு நகைகள் வந்து சேர்ந்ததும் யூலை 1988 ஆம் ஆண்டுக்கு முன் பணம் கட்டியவர்களின் நகைகள் மீளளிக்கப்படவுள்ளதாகவும், மற்றையவை படிப்படியாக வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அடகு நகைகள் மீளளிக்கப்படும் திகதி பின்னர் தெரிவிக்கப்படுமென்றும் மாங்குளம் முல்லைத்தீவு நகைகள் மாங்குளம் வங்கியில் வைத்து வழங்கப்படும் என்றும் அறிய வருகிறது. (ச-94)


# வேலைவாய்ப்பு

1. ஓமான் (Oman)
   1. கூலியாட்கள்
   2. சாரதி
   3. மேசன்
   4. தச்சு வேலையாள்
   5. டாக்டர்
   6. நேர்ஸ்

பாஸ்போட், 6 படம்,
அனுபவச் சான்றிதழ்களுடன் வரவும்.

2. குவைத் (Kuwait)
எயாபோட் போட்டர்
சம்பளம் - 50 K. D

3. யப்பான் (Japan)
நாம் முன்னர் எடுத்த சகல தரப்பினருக்குமான வேலை வெற்றிடங்கள் உண்டு. ஆதலால் நாம் தொடர்ந்தும் எடுத்துக்கொண்டு இருக்கின்றோம்.

4. சவூதி (Saudi)
சகல தரப்பினருக்குமான வேலைவாய்ப்புகள் எம்மிடம் உண்டு. பாஸ்போட், 6 படம் அனுபவச் சான்றிதழ் ஆகியவற்றுடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி

**T.V. TRAVELS**
**Brown Road,**
**Kokuvil.**

(2571)


## பாலம் கட்டும் வேலை ஆரம்பம்

கிளிநொச்சி மே 16
கரடிப்போக்கு சந்திக்கு அண்மையில் உள்ள கணேசபுர பாலத்தைக் கட்டுவதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1987 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கைகளின் போது உடைக்கப்பட்ட இந்த பாலம் தற்போது சிதைந்த நிலையில் காணப்படுகின்றது.

இந்த பாலம் கட்டுவதற்கான செலவை கிளிநொச்சி நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளர் திரு. நவரத்தினராசா திணைக்கள நிதியில் இருந்து ஒதுக்கியுள்ளார். (ச-76)

## தனித்தனி குழுக்கள்

கொழும்பு, மே 16
உலக வங்கியும் சர்வதேச நாணய சபையும் தனித்தனியே குழுக்களை இலங்கைக்கு அனுப்ப உள்ளன.

இலங்கையின் பொருளாதார நிலைமை பற்றிய சகல அம்சங்களையும் பரிசீலனை செய்வதே இக் குழுக்களின் நோக்கம் என்று தெரிகிறது.

இந்த இரண்டு நிறுவனங்களிடமிருந்தும் இலங்கை பொருளாதார உதவி கோரியிருப்பது தெரிந்ததே. (அ-எ)

# கலைஞனுக்கு விழா எடுக்கும் மக்களைப் போற்ற வேண்டும்

## உதவி அரசாங்க அதிபர் பேச்சு

யாழ்ப்பாணம், மே 16
''இன்று வாழ்ந்துகொண்டிருக்கும் ஒரு சிற்பக் கலைஞனுக்கு விழா எடுத்துக் கௌரவிக்கும் இக்கிராம மக்களை உண்மையிலே போற்ற வேண்டும். கலைஞன் ஒருவனை அவன் உயிருடன் இருக்கும்போதே பாராட்டுவது தான் சிறப்பு''

சிற்பக் கலைஞர் திரு.சரவணமுத்து கணேசமூர்த்தியைக் கௌரவித்து வட்டு. கிழக்கு வாசகர் வட்டத்தினர் நடத்திய பாராட்டு விழாவில் கலைஞருக்குப் பொன்னுடை போர்த்து உரையாற்றிய வலி. மேற்கு உதவி அரசாங்க அதிபரும், பிரசித்தி பெற்ற சிறுகதை எழுத்தாளருமான திரு. து.வைத்திலிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வட்டு. மேற்கு வீரபத்திர ஆலய வீதியில் நடைபெற்ற இந்தப் பாராட்டு விழாவுக்கு சமாதான நீதிவானும் பிரசித்த நொத்தாரிசுமான திரு. கி. வைரமுத்து தலைமை வகித்தார்.

ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு. சி. சிவசுப்பிரமணியம் இந்த விழாவில்உரையாற்றியபோது ''கலைஞர் சரவணமுத்து கணேசமூர்த்தியின் குடும்பம் ஒரு கலைக்குடும்பம். இவருடைய மகன் ஒரு மிருதங்க வித்துவான். இவருடை மனைவி ஒரு வயலின் வித்துவாட்டி. இவருடைய மகள் ஒரு இசை ஆசிரியை. இவருடைய மாமன் ஒரு பாடகர்'' என்று கூறினார்.

வட்டு. பிளவத்தைஅ. மி. த. க. பாடசாலை அதிபர் திரு. வி. ஏகாம்பரமூர்த்தி, வட்டு. பிளவத்தை ச. ச. நிலைய செயலாளர் திரு. இ. கு. சிவஞானம், செந்தமிழ் மணி திரு. நடேசன் சிவசண்முகமூர்த்தி ஆகியோர் இவ் விழாவில் உரையாற்றினர்கள்.

திரு. சி. சிவானந்தன் நன்றியுரை கூறினர். (க)

# முஸ்லிம் வியாபாரியின் மரணம் விபத்து மரணம் எனத்தீர்ப்பு

மட்டக்களப்பு, மே 16
செங்கலடியில் இடம் பெற்ற சைக்கிள் குண்டு வெடிப்பு சம்பவத்தில் பலியான முஸ்லிம் வியாபாரியின் மரணம் விபத்து மரணம் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஏறுவூர் வாசியான உமர் லெப்பை அசனர் என்பவரே குண்டு வெடிப்பில் பலியானவராவர்.

இவரது மரண விசாரணை பதில் நீதிபதி திரு. கே. தியாகராஜாவினல் நடத்தப்பட்டது.

காலஞ்சென்றவரின் உடன் பிறவாச் சகோதரரான ஜனுப் ஏ. எம். சம்சுதீன் (33) சடலத்தை அடையாளம் காட்டி சாட்சியமளிக்கையில்;

'இறந்தவர் சிறிய கடை வைத்து வியாபாரம் செய்கின்றார். வழமையாக செங்கலடி போய் பொருள்களைக் கொள்வனவு செய்து வருவார்.

சம்பவதினம் வழமைபோல் காலை 11 மணிக்கு பொருள்களைக் கொள்வனவு செய்யச் சென்றவர் வீடு திரும்பவில்லை.

பின்பு இச்சம்பவத்தில் சிக்கி இறந்ததாக அறிந்தோம்.

வைத்தியசாலை சென்று இவரின் சடலத்தை அடையாளம் கண்டோம்' என்று கூறினர்.

மரண விசாரணை முடிவில் விபத்து மரணம் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. (ச-21)

# தமிழ்த் திறன் போட்டியில் மானி.மகளிருக்குப் பரிசுகள்

யாழ்ப்பாணம், மே 15
கொழும்புத் தமிழ்ச் சங்கம் அகில இலங்கை ரீதியில் நடத்திய போட்டிகளில் மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவர்கள் பல பரிசில்களையும் சான்றிதழ்களையும் பெற்றுள்ளனர்.

தமிழ் மொழித்திறன் உயர் நிலைப்போட்டியில் செல்வி நவஜோதி பொன்னம்பலம் சான்றிதழ் பெற்றர்.

தமிழ்த்திறன் இடைநிலைப் போட்டியில் செல்வி சிவதர்சினி சதாசிவம் மூன்றம் இடத்தைப் பெற்று ரொக்கப் பரிசும் சான்றிதழும் பெற்றர்.

செல்வி சபாரத்தினம் தேவதர்சனு சான்றிதழ் பெற்றர்.

இலக்கிய ஆய்வுக் கட்டுரை வழங்கிய செல்வி யசோதா விக்னேஸ்வரன் பேராசிரியர் கைலாசபதிநினைவுப்பரிசில்முதலாவது இடத்தைப் பெற்றர். இவருக்கு ரொக்கப்பரிசும் சான்றிதழும் வழங்கப்பட்டன.

# மாணவரின் உடைப் பிரச்சினை அமைச்சரின் பரிசீலனையில்

கொழும்பு, மே 16
பாடசாலை மாணவன் பத்தாம் வகுப்பு வரை அரைக் காற்சட்டை அணிந்து செல்ல வேண்டும் என்ற கட்டுப்பாட்டைக் கொண்டு வருவது பற்றி கல்வி அமைச்சர் லொக்கு பண்டார பரிசீலனை செய்து வருகிறர்.

இது சம்பந்தமாக இரு வாரங்களில் பூரண அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கும்படி அமைச்சர் தனது அதிகாரிகளைப் பணித்திருக்கிறர்.

தற்சமயம் மாணவன் எட்டாம் வகுப்புவரையே அரைக் காற்சட்டை அணிந்து செல்ல வேண்டும். அதற்கு மேற்பட்ட வகுப்பு மாணவர்கள் மட்டுமே நீளக்காற்சட்டை அணிந்து செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்,

நீளக்காற்சட்டை அணிவதால் மாணவருக்கும் ஆசிரியருக்கும் வித்தியாசம் தெரிவது இல்லையாம். அதுமட்டுமல்ல புகைபிடிப்பது போன்ற செயல்களில் கூச்சமின்றி மாணவர் ஈடுபட நீளக்காற்சட்டை அணிவது உதவுகிறதாம். (க-எ)

## திரேசா மகளிரில் கம்பியூட்டர் கல்வி ஆரம்பம்

கிளிநொச்சி மே 16
கிளிநொச்சி புனித திரேசா மகளிர்கல்லூரியில்முறைசாரா கல்வி திட்டத்தின்கீழ்கொம்பியூட்டர் பாடநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது;

கிளிநொச்சி மாவட்டத்தில் கம்பியூட்டர்பாடநெறி முதல் முலாக இங்கேயே போதிக்கப்பட உள்ளது;

இந்த ஆரம்ப வைபவம் புனித திரேசா மகளிர் கல்லூரி அதிபர் திருமதிப.மார்க்கண்டு தலைமையில் நடைபெற்றது.

கல்வி அதிகாரி ஜனுப் இனுனு கனகபுரம் பாடசாலை அதிபர் ஆறுமுகதாஸ், ஆசிரியர் [illegible] ஆரம்ப வைபவத்தில் உரையாற்றினர்கள். (ச-[illegible])

## கைஸ் கண்டனம்

யாழ்ப்பாணம் மே 16
சுன்னகத்தில் சுட்டுக் கொல்லப்பட்ட மாணவன் முத்துக்குமாரு கோபாலகிருஷ்ணன் இளைஞர் பொது மன்றத்தின் சுன்னகப் பிராந்திய முக்கிய உறுப்பினர் என்று மாணவர் இளைஞர் பொது மன்றம் (கைஸ்) அறிவித்துள்ளது.

இக் காலகட்டத்தில் எமது மாணவர்கள் எதுவித காரணமுமின்றி சுட்டுக்கொலை செய்யப்படுவதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றேம்.

கோபாலகிருஷ்ணனின் இழப்பால் துயரப்படும் குடும்பத்தவர்களுக்கும் மாணவர்களுக்கும் மாணவர் இளைஞர் பொதுமன்றம் கண்ணீர் அஞ்சலிகளைச் செலுத்துகின்றது- என்று கைஸ் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-10)

# நாயன்மாரின் வாழ்க்கை வரலாறுகள் எமக்கு நம்பிக்கை ஊட்டுகின்றன

## நாவுக்கரசர் குருபூசை நிகழ்ச்சியில் உரை

ஊர்காவற்றுறை மே 16
எமது நாயன்மார்கள் தங்கள் வாழ்வில் கடைப்பிடித்த உயர்ந்த கொள்கைகள், திடமான நம்பிக்கைகள் ஆகியவற்றை அவர்களின் வாழ்க்கை வரலாற்றைக் கற்றுக்கொள்வதன் மூலம் அறியலாம். தற்போது நெருக்கடியான காலகட்டத்தில் வாழ்ந்து வரும் நாங்கள் அந்த உயர்ந்தவர்களது எண்ணங்களின் மூலம் வாழ்வில் நம்பிக்கை கொண்டு வாழப்பழகிக் கொள்ள வேண்டும்.

சுருவில் திருமுறைக் கழகத் தலைவர் திரு. சு. சிவசம்பு சுருவில் ஐயனர் தேவஸ்தானத்தில் நடைபெற்ற திருநாவுக்கரசு நாயனரின் குருபூசை தொடர்பான நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு கூறினர்.

இவர் தொடர்ந்து உரையாற்றுகையில், ''திருநாவுக்கரசு நாயனரின் வாழ்க்கை வரலாற்றைப் படிக்கும் போது எமது உள்ளம் பரிபூரணமடைகின்றது.

துன்பங்களைக் கண்டு அவர் துவண்டு வாடவில்லை. தென்பாக இருந்தார். அதைப் போலவே வாழ்வின் சொல்லொண்ணுத்துயரங்களை அனுபவித்து வரும் நாங்கள் நாயன்மார்களின் வரலாற்றைப் படிப்பதன் மூலம் வாழ்வில் நம்பிக்கையை ஏற்படுத்திக் கொள்ளலாம்'' என்றர். (க - 16)

# கைதடி மகா வித்தியாலயத்தில் புது வேலைத்திட்டங்கள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 16
கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயத்தில் அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் பல வேலைத் திட்டங்கள் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்று அறிய வருகின்றது.

அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க மேற்படி பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின உபதலைவரும் ஆரம்பகால உறுப்பினருமான திரு. சின்னையா ஜே. பி. ரூபா 33,000/- செலவில் முன்பக்க மதிலைக்கட்டிக் கொடுத்ததுடன் ரூபா 6,000/- செலவில் வெள்ளையடித்தும் கொடுத்துள்ளார். அத்துடன் பல்கலைக் கழகம் செல்லும் முதல் மாணவனுக்குப் புலமைப் பரிசில் வழங்கவும் முன்வந்துள்ளார்.

பாடசாலை நலன் விரும்பிகளின் உதவியுடன் அமைக்கப்படும் இரண்டு வகுப்பறை கொண்ட கட்டடம் ஒன்று முடிவடையும் தறுவாயில் உள்ளது.

இதைவிட வெளிநாட்டிலுள்ள பாடசாலையின் பழைய மாணவர்கள் ஏற்கனவே 1 லட்சத்து 27 ஆயிரம் ரூபா அனுப்பி வைத்துள்ளதுடன் மேலும் நிதி சேகரித்துக் கொண்டிருக்கின்றனர்.

இந்த நிதியில் இரண்டு மாடிக் கட்டடம் ஒன்றும், அலுவலகமும் நூல் நிலையமும் அமைப்பதற்கு அத்திவாரம் இடப்பட்டுள்ளது.

இதற்கான வேலைகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று அதிபர் தெரிவிக்கின்றர். (க)

## வைத்தியகலாநிதியின் முன்மாதிரி

சுழிபுரம் மே 16
பண்ணகம் மெய்கண்டான் மகாவித்தியாலய மாணவர்களின் மதிய உணவு வகைகள் தயாரிப்பதற்கு வேண்டிய பாத்திரங்களை வாங்குவதற்கு வைத்திய கலாநிதி வடிவாம்பிகை சைவிலாசபிள்ளை ரூபா 5,000 அன்பளித்துள்ளார். (ச-18)


## அறிவித்தல்

அண்மையில் வெளியிடப்பட்ட ஓர் துண்டுப்பிரசுரத்தில் நல்லூர் முதலாளியிடம் விடுதலைப்புலிகள் 50 லட்சம் கேட்டு பயமுறுத்தியிருந்தனர் என குறிப்பிடப்பட்டிருந்தது.


இதுமுற்றிலும் உண்மைக்குப் புறம்பான ஓர் தகவல். என்னிடம் யாரும் பணம் கேட்கவும் இல்லை. நான் யாருக்கும் பணம் கொடுக்கவும் இல்லை.

அறங்காவலர்,
நல்லூர் கந்தசாமி கோயில்.
(C/2487)

## யாழ் மாவட்ட மினி சினிமா சங்கம்
# முக்கிய அறிவித்தல்

யாழ். மாவட்ட மினிசினிமா உரிமையாளர்கள் அனைவரும் எதிர்வரும் 18-5-89 வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு அதிமுக்கிய விடயம் சம்பந்தமாக காரியாலயத்தில் நடைபெறவுள்ள கூட்டம் ஒன்றில் கலந்து கொள்ளும் வண்ணம் வேண்டப்படுகின்றனர்.

தலைவர்
யாழ். மாவட்ட மினி சினிமா சங்கம். ((10940)



25.பொஸ்டர் ஒழுங்கை

# 'ஹேலீஸ் ஸ்னுப் ஷொட்ஸ்'.
## அதி நவீன புகைப்படத் தொழில்நுட்ப நுணுக்கங்கள் பொருந்திய

கோப்பல் 7050 மினி லாப் முறையும்
போட்டோ பினிசிங் நிலையமும்
கொழும்பு 10. பொஸ்டர் ஒழுங்கை 25 ஆம் இலக்கத்தில் திறந்து வைக்கப்படுவதைப் பெருமையுடன் அறிவிக்கின்றது.

வியாபார விசாரணைகள் வரவேற்கப்படுகின்றன
விசாரிக்க வேண்டிய முகவரி :
திரு. என். எஸ் விஜேரட்ண

**ஹேலீஸ் போட்டோ பிரிண்ட் (பிரைவேட்) லிமிடட்**
25, பொஸ்டர் ஒழுங்கை,
கொழும்பு 10.
தொலைபேசி: 599087 - 599100

ஹேலீஸ் ஸ்னுப் ஷொட்ஸ்
வாழ்காலம் நிலைத்திருக்கும் தரச்சிறப்புக் கொண்டது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரி ஆஸ்பத்திரிக்கு விரைவில் அம்புலன்ஸ் வசதி

## பணிப்பாளர் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,மே16 பூநகரிப் பகுதி நோயாளர்களை அவசர சிகிச்சைக்காக யாழ். வைத்தியசாலைக்கு எடுத்துவர அம்புலன்ஸ் ஒன்று வழங்கப்பட இருக்கிறது. பூநகரிப்பகுதிநோயாளர்களை அவசரசிகிச்சைக்காக யாழ். வைத்தியசாலைக்கு எடுத்துவர அம்புலன்ஸ் இல்லாததால் தற்போது நோயாளர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர்.

இதைத் தொடர்ந்தேயாழ் சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ந. கனகசபையின் நடவடிக்கையின் பலனாக இங்குள்ள அம்புலன்ஸ் திருத்தப்பட்டு விரைவில் சேவைக்கு அனுப்பப்படவிருக்கிறது.

## பிரார்த்தனை

இயேசுவின் திரு இருதயம் உலகம் முழுவதும் என்றென்றும் வணங்கவும், போற்றவும், நேசிக்கவும், மகிமைப்படுத்தவும் படுவதாக.

இயேசுவின் திரு இருதயமே! எங்கள் பேரில் இரக்கமாயிரும்.

கைவிடப்பட்டவர்களின் உபகாரியான புனித யூதாததேயுவே! எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.

இச்செபத்தை தினமும் ஒன்பதுமுறை செபித்து வந்தால் நீங்கள் கேட்கும் விண்ணப்பங்கள் அருளப்படும்.

மன்றாட்டுக்கள் கேட்கப்பட்டமைக்காக இயேசுவின் திரு இருதயத்துக்கும், புனித யூதாததேயுக்கும் நன்றி.

ரி. ஆர். சந்திரமதி

(10928)

## கழகங்கள் மைதானம் அமைத்து விளையாட்டை ஊக்குவிக்க வேண்டும்

### உதவி அரசாங்க அதிபர் பேச்சு

''எமது பிரதேசத்தில் கடந்த கால நிகழ்வுகளினுல் பின் தள்ளப்பட்டிருந்த விளையாட்டு நிகழ்ச்சிகளுக்கு புத்துயிர் அளிக்க வேண்டும் இதற்காகக் கிராமங்கள் தோறும் விளையாட்டுக் கழகங்களும் மைதானங்களும் அமைக்கப் படவேண்டும்.''

ஊர்காவற்றுறை விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான போட்டிகளுக்கு தலைமை வகித்து உரையாற்றிய ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சீவரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிகளுக்கான ஏற்பாடுகளை விளையாட்டு அதிகாரி திரு. பே. பொன்னுச்சாமி மேற்கொண்டிருந்தார்.

உதவி அரசாங்க அதிபர் தொடர்ந்து உரையாற்றுகையில், முன்னரெல்லாம் யாழ்ப்பாண நகரில் முற்றவெளி, மத்திய கல்லூரி மைதானம் சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானம் ஆகியவற்றில் தினமும் நடந்தேறிய விளையாட்டு நிகழ்ச்சிகளினுல் மக்களின் ஆர்வம் மேலோங்கியிருந்தது. அந்த நிலை இங்கு மீண்டும் தோன்ற வேண்டும் என்றுர்.

## மருதங்கேணியில் விளையாட்டுப் போட்டி

தாளையடி, மே 16

மருதங்கேணி இந்து. தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி அதிபர் திரு. பொ. சங்கரப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

வடமராட்சி கோட்டக் கல்வி அதிகாரி திரு. பொ. வீரபத்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

போட்டியில்வெற்றியீட்டியவர்களுக்கு கோட்டக்கல்வி அதிகாரி திரு. பொ. வீரபத்திரன் பரிசில்களைவழங்கினுர்.

(ச-114)

## புங்குடுதீவில் உதைபந்தாட்டப் போட்டி

புங்குடுதீவு நசரேத் சனசமூக நிலையத்தின் 33ஆவது வருடநிறைவு விழாவை முன்னிட்டு காலஞ் சென்ற இரு தயராஜா சந்திரகுமார் ஞாபகார்த்த சுற்றுக் கேடயத்துக்கான 7 பேர் கொண்ட நொக்அவுட் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகள் தீவுப்பகுதி ரீதியில் புங்குடுதீவு முற்றவெளி மைதானத்தில் இம்மாதம் 27 ஆம் 28 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை மேற்படி நிலையத் தலைவரும் செயலாளரும் விளையாட்டுக்கழகப்பொறுப்பாளரும் மேற்கொண்டுள்ளார்கள்.

போட்டி நிகழ்ச்சிகளை இலங்கைஒலிபரப்புக் கூட்டுத்தாபன கத்தோலிக்க சேவை பகுதிநேர அறிவிப்பாளர் திரு. வி.அன்ரனிஸ் தொகுத்தளிக்கவுள்ளார். (க)

## கிளிநொச்சியில்

கிளிநொச்சி கொத்தணி பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டி 18ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறும்.

கிளிநொச்சி கொத்தணிஅதிபர் திரு. என். சோதிநாதன் தலைமையில் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் இப்போட்டிகள்நடைபெறும். [ச-144]

## சாரணியர் சத்தியத்துக்கு அமைய வாழ்க்கையை நடத்த வேண்டும்

### சாரணியர் உட்புகு விழாவில் உரை

தாளையடி, மே. 16

''சாரணியர்கள் ஆரம்பத்தில் தாம் செய்யும் சத்தியப் பிரமாணத்திற்குக் கட்டுப்பட்டே, இறுதிவரை தமது வாழ்க்கையை நடத்தவேண்டும்''

யாழ் மாவட்ட சாரணியர் ஆணையாளர் திருமதி அ. அரியரத்தினம் இவ்வாறு கூறினுர்.

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற சாரணியர் உட்புகுத்தல் விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அவர் உரையாற்றினுர்.

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய சாரணியர் குழுத்தலைவி திருமதி கே. சிவராசா தலைமையில் இவ் விழா நடைபெற்றது. திருமதி அ. அரியரத்தினம் இவ்விழாவில் மேலும் கூறியதாவது ''கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பாடசாலைகளிலும் சாரணியர்கள் அணி உருவாக்கப்பட்டிருப்பதையிட்டு நாம் மகிழ்ச்சி அடைகின்ருேம்''.

இப்படி அவர் கூறினுர்.

சாரணியரின் அணிவகுப்பு மரியாதையை யாழ் மாவட்ட சாரணியர் ஆணையாளர், திருமதி அ. அரியரத்தினம் சாரணியர் பயிற்சியாளர் செல்வி எலாஸ் ஆகியோர் ஏற்றுக் கொண்டனர்.

சாரணியர் உபகுழுத்தலைவி செல்வி ஆர். கோமளகௌரி நன்றி தெரிவித்து உரையாற்றினுர். (ச-144)

## பாடசாலைகளில் பயில்பவர்கள் ஆளுமை விருத்தியில் கூடியவர்கள்

### மெய்வல்லுநர் போட்டியில் உரை

பருத்தித்துறை, மே 16

''மாணவர்களின் முழு ஆற்றலையும் வெளிக் கொண்டு வரும் பொறுப்பு பாடசாலையினுடையதாகும். தனியார் கல்வி நிலையங்களில் கல்வி கற்கும் மாணவர்களை விட பாடசாலைகளில் மட்டும் கல்வி கற்கும் மாணவர்களின் ஆளுமை விருத்தியில் கூடியவர்களாகத் காணப்படுகின்றனர்.

அல்வாய்ஶ்ரீலங்காதமிழ்வித்தியாலயத்தில் நடைபெற்ற இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து உரையாற்றும் போது வடமராட்சி கோட்டக் கல்வி அதிகாரிதிரு. பொ. வீரபத்திரன்மேற் கண்டவாறுகூறினுர்.

இந்நிகழ்ச்சி பாடசாலை அதிபர் திரு. க. பரமானந்தன் தலைமையில் நடைபெற்றது.

திரு. வீரபத்திரன் தனது உரையில் மேலும் கூறியதாவது''மாணவர்களின் விருப்பத்திற்கும்ஆற்றலுக்கும்ஏற்ப பாடவிதானத்திற்குப் புறம்பான இணை பாடவிதானம் அமைக்கப்பட வேண்டும். இவற்றில் மாணவர்கள் ஈடுபடுவதன் மூலம் தமது ஆளுமையைவிருத்திசெய்யமுடியும்

இப்படி அவர் கூறினுர்.

மெய்வல்லுநர் போட்டியில் கந்தப்பு இல்லம் முதலாம் இடத்தையும் பெரிய தம்பி இல்லம் இரண்டாம் இடத்தையும் தம்பையா இல்லம் மூன்றும் இடத்தையும் பெற்றன. [ச-118)

## குடும்பம் கைது

வல்வெட்டித்துறை, மே 16

கடந்த 7 ஆம் திகதி வல்வெட்டித்துறை, தீருவிலில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்களில் சிலர் விடுவிக்கப்பட்டுவிட்டனர். இன்னும் இருவர் விடுவிக்கப்படவில்லை. திருமதி பரமேஸ்வரி அருட்பிரகாசம், ச. ராதகுமார் ஆகியோரே விடுவிக்கப்படாதவர்கள் ஆவர். [ஒ 16]

## தெரிவு

பண்டத்தரிப்பு, மே 16

பண்டத்தரிப்பு பரிஷ் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகத் திரு. நா. சூசைப்பிள்ளை போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (ச- 120)


இசைத் தட்டுக்களிலிருந்து புதிய சினிமா பாடல்களின் தெரிவிற்கு இதோ சிலபடங்கள்:-

- புதிய பாதை
- மாருத உறவு
- தங்கமணி ரங்கமணி
- அன்னக்கிளி சொன்ன கதை
- கருங்குயில் குன்றம்
- இது உங்க குடும்பம்
- என் ரத்தத்தின் ரத்தமே
- அபூர்வ சகோதரர்கள்


Master Recording உம் செய்து கொடுக்கப்படும்

★ றேடியோஸ்பதி ★

58,கஸ்தூரியர் வீதி, யாழ்ப்பாணம். 766, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

(10931)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### திரு. சின்னத்தம்பி தம்பிராசா

(இளைப்பாறிய சுகாதாரப் பரிசோதகர், பருத்தித்துறை.)

மலர்வு: 07-12-1914 உதிர்வு: 18 04-1989

எமது அன்புத் தந்தையின் மரணச் சடங்குகளில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது மரண அறிவித்தலைப் பார்த்து தந்தி, தபால் மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் பல்வேறு உதவிகளைப் புரிந்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு 18-05-1989 வியாழக்கிழமை நடைபெறும் அன்னுரின் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளும்வண்ணம் உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்ருேம்.

தம்பிராசா, சண்முகநாதன் குடும்பத்தினர்

'விவேகானந்தம்'
முத்தட்டுமடலேன்,
கோண்டாவில் மேற்கு.

(487)


## Notice of Introduction

Production of Cement Concrete Blocks

Attention:

a) Institutions Engaged in Rehabilitation
b) Building Contractors
c) Intending House Builders

We are glad to inform that we recently commenced Production of Cement Concrete Blocks for Commercial Purpose: This Production is Carried out under the Personal Supervision of an Experienced Civil Contractor (Govt. Registered) who earlier operated in the South.

If the Need Demands Supply of

**1000 — 3000 Blocks Per Day**

Could be Arranged. Price Reasonable and Quality Excellent.

**Ananth Farm**
Kadduvan Road,
Myliddy North.

[491]


## முறைசாராக் கல்வி-(மரவேலை)

மேற்படி கல்வியைப் பெற விரும்பும் 8 ஆம் வகுப்பு சித்தியடைந்த மாணவர்கள் கல்லூரி அதிபருடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

அ. மு. அருணுசலம்,
அதிபர்

யா / மெமோறியல்
ஆங்கிலப் பாடசாலை,
மானிப்பாய்.

(சி/2483)

## வலிகாமம் மேற்குப் பிரதேச சபை - சுழிபுரம் 1989 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடும் சந்தைக் கடைகளுக்கு, கருவாட்டுக் கடைக்கு சீல் வைத்த கேள்விகள் 01 - 06 - 1989 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை என்னுல் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விகள் விசேட ஆணையாளர், வலிகாமம் மேற்குப் பிரதேச சபை, சுழிபுரம் என்ற முகவரியிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் போடப்பட வேண்டும்

கேள்விப் படிவங்கள் 30 - 05 - 1989 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிவரை உரிய கட்டணங்களைச் செலுத்தி சுழிபுரம் பிரதேசசபை அலுவலகத்தில், அலுவலக நாட்களில் பெற்றுக் கொள்ளலாம்.

| இடம் | குத்தகையின் தன்மை | ஏற்றுக்கொள்ளக் கூடிய குறைந்த தொகை | கேள்வி வைப்பு | கேள்விப் பத்திர பணம் |
|---|---|---|---|---|
| வட்டுக்கோட்டை | நவீன சந்தை கடை இல. 4 | 10,000.00 | 100.00 | 25.00 |
| | கடை இல. 6 | 10,000.00 | 100.00 | 25.00 |
| சுழிபுரம் | அலுவலக கட்டிடம் கடை இல. 5 | 35,000.00 | 250.00 | 25.00 |
| | சத்தியகாட்டுச்சந்தை கருவாட்டுக்கடை | 500.00 | 50.00 | 25.00 |

து. வைத்திலிங்கம்
விசேட ஆணையாளர்,
வலிகாமம் மேற்குப் பிரதேச சபை

[சி-2471]

## ஓராண்டு நினைவு அஞ்சலி



### திரு. கந்தசாமி மதியாபரணம்

தோற்றம்; 27 - 11 - 1946 மறைவு: 27 - 05 - 1988

திதி: 16 - 05 - 1989


அன்புத் தெய்வமே! பாசத்தின் பிறப்பிடமே! அறிவுச் சுடர் விளக்கே! அன்போடும் ஆதரவோடும் எம்மை ஆதரித்த தெய்வமே!

நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஓர் ஆண்டு ஆனாலும் உங்கள் நினைவு என்றென்றும் எங்களை விட்டு நீங்காது!

மனைவி, மக்கள், உற்ருர், உறவினர்.

[சி-2545]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### திரு. ம. மத்தியாஸ்

(மயிலிட்டி)

தோற்றம்; 05 - 07 - 1918 மறைவு: 16 - 04 -1989

என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான் — இயேசு.

அன்புத்தந்தையின் ஆன்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்ருேம்.

குடும்பத்தினர்.

6 ஆம் வட்டாரம்,
மயிலிட்டி.

[10903]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யா மொழி

**குறள்:**
பொருள் கெடுத்துப் பொய்மேற் கொளீஇ
அருள் கெடுத்து
அல்லல் உழப்பிக்கும் சூது.

**பொருள்:**
சூது உள்ள பொருளை அழித்துப் பொய்யை மேற்கொள்ளச் செய்து அருளையும் கெடுத்துப் பல வகையிலும் துன்பமுற்று வருந்தச் செய்யும்.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22073
16 - 05 - 1989 த: பெ: இல: 88

# நீடித்த நிகழ்வாகவே இருக்குமா?

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையேயான பிரயாணம் மற்றும் ஒருமுறை ஆபத்தானதாகி உள்ளது. கடந்த வார இறுதியில், இருபத்துநான்கு மணி நேரத்தில், யாழ். கொழும்பு பாதையில் இரண்டு பெரும் கொள்ளைச் சம்பவங்கள் இடம் பெற்றிருந்தன. பயணிகள் பலரது உடைமைகள் அபகரிக்கப்பட்டதுடன் அவர்களுக்கு உடலாபத்தும் விளைவிக்கப்பட்டது. அரசாங்க பஸ்கள், தனியார் பஸ்களில் பயணம் செய்த பலரும் லட்சக்கணக்கான ரூபாக்கள் பெறுமதியான நகைகள், ரொக்கப்பணம் என்பவற்றை இழக்க நேர்ந்தது. லொறிகளில் ஏற்றிச் செல்லப்பட்ட பல லட்சம்ரூபா பெறுமதியான பொருள்களும் சூறையாடப்பட்டன.

யாழ். கொழும்பு பாதையில், வவுனியாவுக்கு அப்பால் உள்ள காடடர்ந்த பகுதி தமிழ்ப் பயணிகளுக்கு வருடங்கள் பலவாகப் பயங்கரப் பிரதேசமாக விளங்கி வருகிறது. தமிழர்களைக் கொள்ளையடிக்கவும், கொலை செய்யவும், கொள்ளையர்களும், காடையர்களும் தெரிந்தெடுத்த விசேட பிரதேசமாக விளங்குகிறது.

வருடக் கணக்காகப் பல உயிரிழப்புகளும், உடைமை இழப்புகளும் அந்தப் பகுதியில் விட்டு விட்டு நடந்து வந்த போதிலும் அவற்றைத் தடுக்க உறுதியான, திட்டவட்டமான, தீர்க்கமான, நிரந்தர நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

அசம்பாவிதங்கள் நடக்கும்போது தற்காலிகத் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படும்; ஒரு சில வாரங்களுக்கு அவை தொடரும். பின்னர் ஓய்ந்துவிடும். அந்த ஓய்ச்சல் நிலையைப் பயன்படுத்தி மீண்டும் கொள்ளையர்களும், கொலைஞர்களும் தமது தொழிலைத் தாராளமாக மீளத் தொடங்குவார்கள். அச்சத்தின் நிமித்தம் பயணிகள் சில தினங்களுக்குப் பிரயாணம் செய்வதற்குப் பின்னடிப்பார்கள். தேவையை ஒட்டி, அவசரத்தைக் கருதி முந்திய சம்பவங்களை மறந்தவர்களாக மீண்டும் ரொக்கப் பணத்துடனும், நகைகளால் அலங்கரித்துக் கொண்டும் பயணம் கட்டத் தொடங்குவார்கள்.

அரசாங்கமும் வடபகுதிப் பயணிகளுக்கும், பொருள்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களுக்கும் பாதுகாப்பு அளிப்பதில் அக்கறை செலுத்துவதில்லை. தமிழ்ப் பயணிகளில், அவர்களின் உடைமைகளில் அக்கறை இருந்தால், பாதுகாப்பு ஏற்பாடுகளை நிரந்தரமாகப் பயன்படுத்தி இருக்கலாம்.

குறிப்பிட்ட ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடம் வரை வாகனங்களுக்குப் போதிய பாதுகாப்பு வழங்கலாம். சம்பந்தப்பட்ட முழுப் பகுதியிலும் அடிக்கடி படைகளின் தீவிர ரோந்து நடவடிக்கைகளை அறிமுகப் படுத்திக் கண்டிப்பாகச் செயற்படுத்தலாம்.

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பொலீஸாரிடம் அப்படி எவ்வித திட்டமும் இருப்பதாக இல்லை. அது சம்பந்தமாக அவர்கள் அக்கறை கொள்வதாகவும் தகவல் இல்லை. திரு. ஆர். சுந்தரலிங்கம் பிரதிப் பொலீஸ் மா அதிபராக இருந்தபோது, இது விடயத்தில் நேரடி அக்கறை எடுத்துச் சில பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்தது ஞாபகத்திற்கு வருகிறது. அதற்குப் பின்னர் குறிப்பாக 1983 இன் பின்னர் வட பகுதிப் பெரும் பாதையில் பொலீஸார், பயணிகளுக்கும், வாகனங்களுக்கும் பாதுகாப்பு அளிக்க அக்கறை காட்டியதாக இல்லை.

தமிழர்களும் இந்த நாட்டின் பிரசைகளே, அவர்கள் தனிநாடு ஒன்று உருவாக்க முடியாது என்று வாதாடி வந்த அரசாங்க அரசியல்வாதிகள் எவரும் பயணத்தின் போது, கேந்திர பாதையின் வழியாகப் பயணம் செய்யும் போது, தமிழ்ப் பயணிகளுக்கு ஏற்பட்ட இழப்புகள் குறித்து அக்கறைப்பட்டது இல்லை.

தமிழர்களின் பல அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டது போலவே, பயணத்தின் போது பிரசைகளுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்ற அடிப்படைத் தேவையைப் பூர்த்தி செய்வதிலும் அரசுகள் அக்கறை இன்றி இருந்தன.

இந்த நிலை இப்போதும் தொடர்கிறது. இனியும் நீடிக்கப் போகிறதா? தமிழ்ப் பிரயாணிகள், யாரும் கவனிக்காத கவலைப்படாத ஒரு கூட்டமாகவே தொடர்ந்தும் வாழ்வதா? அவர்களின் நலன்களை நசுக்குதல் நீடித்த நிகழ்வாகவே இருக்கப் போகிறதா?

அனேகமாக இரவு வேளைகளிலேயே நடந்த கொள்ளைகள், கொலைகள் இப்போது வடபகுதியின் நீண்டபாதையில் பகலிலும் தாண்டவம் ஆடத் தொடங்கி விட்டன. இந்தப் பயங்கரத்திலிருந்து தமிழ்ப் பயணிகள் பாதுகாக்கப்படுவது எப்போது? அந்தப் பொறுப்பை அரசு எப்போது கையேற்கப் போகிறது?

# தென் ஆபிரிக்க அமைச்சர்கள் ஐவர் திடீர் இராஜினாமா!

ஜோஹன்னஸ்பேர்க், மே 15
தென்ஆபிரிக்க அமைச்சரவையில் இருந்து 5 அமைச்சர்கள் இராஜினாமாச் செய்து விட்டனர்.

இது ஆளும் கட்சி வட்டாரங்களில் அதிர்ச்சியை ஏற்படுத்தி விட்டது.

நாடாளுமன்றத் தேர்தல் செப்டம்பர் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அத்தேர்தலின் போது கடைப்பிடிக்க வேண்டிய கொள்கைகள் பற்றிய விஷயத்தில் கருத்து வேற்றுமை ஏற்பட்டது.

அதைத் தொடர்ந்து அமைச்சர்கள் இராஜினாமாச் செய்தனர். (எ)

30 ஆண்டுகளின் பின்னர்

# சீன - ரஷ்ய உறவில் புதிய சகாப்தம்

# பீகிங்கில் 'கோர்பச்சேவ் அறிவிப்பு!

## மாணவர் ஆர்ப்பாட்டத்தினால் வரவேற்பு விமானநிலையத்தில்

பீகிங், மே 15
30 ஆண்டுகளின் பின் முதல் தடவையாக சீனாவுக்கு விஜயம் செய்த பெருமை இன்று சோவியத் தலைவர் மிக்கெய்ல் கோர்பச்சேவுக்கு கிடைத்தது.

சீனாவின் நேரப்படி இன்று நண்பகல் அளவில் திரு.கோர்பச்சேவ் பீகிங் விமான நிலையத்தில் போய் இறங்கினார்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரும் ஜனாதிபதியுமான யுங்சென், விமானத்தில் இருந்து இறங்கிய திரு,கோர்பச்சேவ்வை கைலாகு கொடுத்து வரவேற்றார்.

பின்னர் இரு தலைவர்களும் அருகருகே நிற்க இருநாடுகளின் தேசியக்கொடிகளும் ஏற்றப்பட்டன. 20 பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு மரியாதைசெலுத்தப்பட்டது.

அதன் பின்னர் சோவியத் அதிபர் மிக்கெய்ல் கோர்பச்சேவ் பேசுகையில், ''எனது விஜயம் உலக வரலாற்றிலும் இரண்டு நாடுகளின் சரித்திரத்திலும் புதிய சகாப்தம் ஒன்றைத் தோற்றுவித்துள்ளது''— என்று சொன்னார்.

சீன மாணவர்களின் ஆர்ப்பாட்டம் காரணமாக முன்னர் தீர்மானிக்கப்பட்டபடி திரு. கோர்பச்சேவுக்கு நகரின் மத்தியில் உள்ள தியனமன் சதுக்கத்தில் வரவேற்பளிக்கவில்லை.

பீகிங் விமான நிலையத்திற்கு வரவேற்பு வைபவம் மாற்றப்பட்டது.

திரு. கோர்பச்சேவ் பீகிங் வந்திறங்கிய நிகழ்ச்சிகளை அனைத்தும் சோவியத் டெலிவிஷன் நேரடி ஒளிபரப்புச் செய்தது.

1959 இல் சோவியத் பிரதமராக இருந்த திரு. நிகிடா குருஷேவ் சீனாவிற்கு விஜயம் செய்தார்.

அதன் பின்னர் இரு நாடுகளின் இராஜதந்திர உறவுகள் சீரழிந்தன. (எ)

# பனாமா அரசியல் நெருக்கடி

பனாமா நகரம், மே 15
பனாமாவின் இராணுவத் தளபதி ஜெனரல் நொரியாகோ தலைமையிலான அரசுக்கு எதிரான மக்கள் கிளர்ச்சிக்கு கிறிஸ்தவ தேவாலயத் திருச்சபை ஆதரவளித்திருக்கிறது.

இந்த அரசைக் கவிழ்க்கும்படி அமெரிக்க அதிபர் புஷ் பனாமா மக்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜெனரல் நொறியாகோ நிறுத்திய வேட்பாளர் தோல்வியடைந்து எதிர்க்கட்சி வேட்பாளர் வெற்றி பெற்றார். ஆனால் தேர்தலில் இருதரப்பிலும் மோசடிகள் இடம்பெற்றதாகக்கூறி தேர்தல் முடிவுகள் செல்லுபடியாகாது என்று ஜெனரல் நொரியாகோ அறிவித்தார்.

அதைத்தொடர்ந்து பனாமா அரசியல் நெருக்கடி தீவிரமடைந்து உள்ளது. (எ)

★ கைப்பற்றப்பட்ட

# அரபுப்பிரதேசத்தில் தேர்தல் பி.எல். ஓ. விரைவில் முடிவு!

ரூனீஸ், மே 15
ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பகுதிகளில் தேர்தலை நடத்துவது பற்றிய இஸ்ரவேலிய அரசின் புதிய யோசனை குறித்து பலஸ்தீன விடுதலை இயக்கம் விரைவில் தனது கருத்துக்களை வெளியிடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ரூனிஷியத் தலைநகரில் பலஸ்தீன விடுதலை இயக்கப் பேச்சாளர் ஒருவர் இத்தகவலை வெளியிட்டார்.

காஸா, மற்றும் மேற்குக் கரை அரபுப் பிரதேசங்களில் பொதுத் தேர்தலை நடத்தி சுயாட்சி அமைப்பு ஒன்றை ஏற்படுத்தும் திட்டத்தை இஸ்ரவேலிய அமைச்சரவை நேற்று முன்தினம் அங்கீகரித்தது.

அதைத் தொடர்ந்து தேர்தல் நடத்துவதற்கான ஒழுங்குகளை இஸ்ரவேலிய அரசு செய்து வருகிறது. [எ]

# அ.தி.மு.க. பலம் பெற்றுவிட்டது காங்கிரஸ் தலைவர் அறிவிப்பு

மதுரை, மே 15
''அ. தி. மு.காவின் இரு அணிகளும் இணைந்த பின் தி. முக.வுக்கு சமமாக அ. தி. மு க பலம் பெற்று விட்டது' என காங்கிரஸ்தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி கூறியுள்ளார்.

லோக்சபாதேர்தலை சந்திக்க காங்கிரஸ் கட்சியை தயார் செய்வதாகவும் கூறினார்.

ராமமூர்த்தி மதுரை வந்தார். நிருபர்களிடம் அவர் கூறியதாவது:

இந்த ஆண்டு இறுதியில் லோக்சபா தேர்தல் நடைபெற உள்ளது. இத்தேர்தலில் காங்கிரஸ் கட்சி அமோக வெற்றி பெறுவதற்காக காங்கிரஸ் கட்சியை தயார் செய்து வருகிறேன்.

மத்தியில் காங்கிரஸ் கட்சி தொடர்ந்து ஆட்சியில் இருக்க எல்லா முன் எச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும்.

அகில இந்திய ரீதியில் காங்கிரஸ் கட்சியின் விதியை தீர்மானிக்கும் தேர்தல் லோக்சபா தேர்தல்.

இத்தேர்தலில் காங்கிரஸ் கட்சி எந்த ஆபத்தையும் எதிர் நோக்கக் கூடாது.

**கூட்டணி**

மாநிலக் கட்சியுடன் கூட்டு வைப்பதில் எந்தத் தவறும் இல்லை என்பது எனது தனிப்பட்ட கருத்து.

# எகிப்து ஜனாதிபதி பங்குபற்றும் அரபு நாடுகள் உச்சி மாநாடு

10 ஆண்டுகளில் முதல் தடவையாக

டமஸ்கஸ், மே. 15
வருகிற 23 ஆம் திகதி மொரொக்கா தலைநகர் கஸாபிளாங்காவில் அரபு நாடுகளின் உச்சி மாநாடு நடைபெறவிருக்கிறது.

1979 ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதன் முறையாக எகிப்து ஜனாதிபதியும் இம் மாநாட்டில் கலந்து கொள்கிறார்.

இதை சிரியா வரவேற்றுள்ளது.

1979 இல் எகிப்தின் ஜனாதிபதியாக இருந்த அன்வர் சதாத் இஸ்ரவேலுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார்.

அதனால் அரபு நாடுகள் எகிப்துடனான ராஜதந்திர உறவுகளை முறித்துக்கொண்டனர்.

இன்னமும் மூன்று அரபு நாடுகள் எகிப்துடன் ராஜதந்திர உறவை புதுப்பிக்கவில்லை. அவற்றில் ஒன்று சிரியா. ஏனைய நாடுகள் லிபியாவும் லெபனானும் ஆகும். (எ)

# அமெரிக்கக் கடற்படையின் கப்பலில் மர்மவெடி விபத்து

## இருவீரர்கள் மரணம்

வாஷிங்டன், மே 15
அமெரிக்கக் கடற்படைக்குச் சொந்தமான விமானம் தாங்கிக் கப்பல் 'யு. எஸ். எஸ். அமெரிக்கா' வில் ஏற்பட்ட வெடி வி[.]த்தில் 2 வீரர்கள் கொல்லப்பட்டனர்.

கப்பலின் என்ஜின் அறையில் திடீரென்று வெடிவிபத்து ஏற்பட்டது. இதற்குக் காரணம் தெரிவிக்கப்படவில்லை.

அமெரிக்கக் கடற்படைக் கப்பல்களில் ஒரு மாதத்தில் ஏற்பட்ட மூன்றாவது வெடி விபத்து இதுவாகும்.

வட கரோலினாவுக்கு அருகில் மேற்கு அத்லாந்திக் கடலில் 'யு. எஸ். எஸ் அமெரிக்கா' கப்பல் தரித்து நின்ற போது இச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம் பெற்றது. (எ)

## எதிர்க்கட்சி வேட்பாளர் வெற்றி

புவனர்ஸ்அயர்ஸ், மே15
ஆர்ஜன்ரினாவின் ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சியான பெரோனிஸ்ட் கட்சி வேட்பாளர் கார்லோ மேனின்அமோக வெற்றியீட்டியதாக அறிவிக்கப்பட்டுள்ளது,

இவருக்கு 47 வீத வாக்குகள் கிடைத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ)

## தமிழ்க் குடி மகன் எச்சரிக்கை

கட்டுப்பாட்டை மீறி உறுப்பினர்கள் நடந்து கொண்டால் சபாநாயகர் பதவியை இராஜினாமாச் செய்து விடப் போவதாக திரு. தமிழ்க்குடிமகன் அறிவித்தார்.

தமிழக சட்டசபையில் எம் எல். ஏக்கள் சிலர் சபாநாயகரின் உத்தரவை மீறி பேச முற்பட்டனர்.

அப்போதே திரு. தமிழ்க்குடிமகன் முன்கண்ட எச்சரிக்கையை விடுத்தார். [எ]

# தொண்டு மனப்பான்மையுடன் சேவையாற்றும் ஆசிரியர்களுக்கே மதிப்பு

## பிரியாவிடை விழாவில் உரை

காங்கேசன்துறை,மே16
ஆசிரியசேவை மிகவும் புனிதமானது. சுயநலமற்று தொண்டுமனப்பான்மையுடன் பணிபுரியும் ஆசிரியர்கள் சமுதாயத்தில் பெரிதும் போற்றி மதிக்கப்படுகிறார்கள்.

வீமன்காமம் மகாவித்தியாலயத்தில் 18 வருடங்கள் ஆசிரியராகவும், உப அதிபராகவும், அதிபராகவும் கடமையாற்றி இளைப்பாறும் திரு. கு. நடேசபிள்ளைக்கு மேற்படி வித்தியாலயத்தில் நடத்தப்பட்ட பிரியாவிடை விழாவிலும், பாராட்டு விழாவிலும் கலந்துரையாற்றிய வித்தியாலய அதிபர் திரு. வி, சுப்பிரமணியம் மேற்கண்டவாறு கூறினார்.

வித்தியாலய பெற்றோர் ஆசிரியர் சங்கம் சார்பிலும், அபிவிருத்திச்சங்கம் சார்பிலும், பழைய மாணவர் சங்கம் சார்பிலும் மூன்று பிரிவாக இவ் விழா நடத்தப்பட்டது.

விழாவில் அதிபர் திரு. வி. சுப்பிரமணியம் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

ஆசிரியப்பணியுடன் சாரணியத்திலும் ஈடுபாடு கொண்டமையால் ஆசிரியர் நடேசபிள்ளையின் சேவை தொண்டு மனப்பான்மையுடன் கூடியதாக விளங்கியது.

அவரது சேவையை எல்லோரும் போற்றிப் புகழ்கிறார்கள் இவ்வாறான ஆசிரியர்களைக் காண்பது அரிது என்று கூறுகிறார்கள்.

ஆங்கிலம், சமஸ்கிருதம், பாளி, தமிழ் ஆகிய நான்கு மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்ற ஆசிரியர் இளைப்பாறுவது கல்வி உலகுக்குப் பெரும் நஷ்டமாகும்.

அவர் இளைப்பாறினாலும் அவரது சேவையை கல்வி உலகம் தொடர்ந்தும் பெற்றுக் கொள்ளவேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

திரு. க.கதிரமலையான் பேசுகையில் பதற்றமான சூழ்நிலைகளின் மத்தியிலும் பாடசாலையைச் சிறப்பாக இயங்கச்செய்வதில் திரு நடேசபிள்ளைஆற்றிய பங்கு அளப்பரியது.

பாடசாலை அபிவிருத்தியிலும், மாணவர் கல்வி வளர்ச்சியிலும் கண்ணும் கருத்துமாக இருந்தார். ஆசிரிய சேவையுடன் சமயத் தொண்டிலும், பொதுநலத் தொண்டிலும் மிகுந்தஈடுபாடு கொண்டிருந்தார். அவர் ஆற்றிய பணிகளை இந்தச் சுற்றாடல் மக்கள் ஒருபோதும் மறக்கமுடியாது' என்றார்.

மற்றும் பழைய மாணவர் சங்கத் தலைவர் திரு. ச. கந்தசாமி, செயலாளர் சோ. செல்வரத்தினம். சமாதான நீதிவான் திரு, வ. வைரவப்பிள்ளை, செல்வன் கைலைநாதன் நாகராஜன் உட்படப் பலர் பாராட்டுரை வழங்கினர்.

ஓய்வுபெற்ற மாத்தளைஇந்து வித்தியாலய அதிபர் திரு. வி. வேலாயுதர் நீண்ட வாழ்த்துப் பத்திரம் ஒன்றை வாசித்து ஆசிரியரிடம் கையளித்தார். பழைய மாணவர்சங்க ஆதரவில் அதிபருக்கு சைக்கிள் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. (இ-68)

## அணுகூட அசையாதையா!!

ராகம்: சாரங்கா   தாளம்: ஆதி

**பல்லவி**

அருளின்றி அசையா தையா - கேதீசா
அணுகூட அசையா தையா - உன்தன்
(அரு ......)

**அனுபல்லவி**

அனைத்திலு மிருப்பவனே அனைத்துமா யிருப்பவனே!
அனைத்தையு மறிபவனே அனைத்தையு மிணைப்பவனே!
(அரு ......)

**சரணம்**

ஆக்குவாய் காப்பாய் யாவும் உன் அருள்தானே!
அழிப்பதும் அருள்வதும் யாவும் உன் செயல்தானே!!
அசைப்பதும் அசைவதும் அதுவும் உன் திறம்தானே!
இசைப்பதும் இசைவதும் முடிவும் உன் பதம்தானே!!
(அரு ......)

- முருகு

[இன்று [illegible] திருக்கேதீச்சரம் 6 ஆம் திருவிழா]

# வெளியேறும் சிறுவர்கள் குறித்து பலத்த கண்காணிப்பு

கொழும்பு, மே 16
நாட்டை விட்டு வெளியேறும் பராயம் வராத சிறுவர்கள் குறித்து கொழும்பு சர்வதேச விமான நிலையத்தில் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் பலத்த கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இது சம்பந்தமான பணிப்புரையை குடியகல்வு, குடிவரவு கட்டுப்பாட்டதிகாரி திரு. எம். பி. ரத்னயக்கா விடுத்திருக்கிறார்.

பராயம் வராத சிறுவர்கள் கடத்தப்பட்டு அரபு நாடுகளில் ஒட்டகப் போட்டிக்குப் பயன்படுத்தப்படுவது கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. (க-எ)

## நயினை நாகபூஷணி அம்மன் திருவிழா

வேலணை, மே 16
பிரசித்தி பெற்ற நயினைஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் யூன் மாதம் 5 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. 17 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும 18 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 19 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும், 20 ஆம் திகதி தெப்பத்திருவிழாவும் நடைபெற உள்ளன. (க-167)

## குரும்பசிட்டி சித்தி விநாயகர் திருவிழா

சுன்னாகம், மே 16
குரும்பசிட்டி சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 11ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

19ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும், 20ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன.

திருவிழாக் காலங்களில் தினமும் மாலை 5. 00 மணி முதல் 6.00 மணிவரை சமயப் பிரசங்கங்கள் நடைபெற்று வருகின்றன. (க-27)

## சமய சந்நிதிகளில்

### வண்ணை மேற்கு விநாயகர் திருவிழா

வண்ணை மேற்கு ஸ்ரீ விஸ்வலிங்கப் பிள்ளையார் (மூத்த விநாயகர்) தேவஸ்தான பிரம்மோற்சவம் கடந்த 11 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற்ற கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறுகின்றது.

எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை ரதோற்சவமும், 20ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும். (க-51)

### சங்காபிஷேகம்

கேகாலை மாவட்டம் எதுராபொல ஸ்ரீ பாலவிநாயகர் ஆலய மண்டலாபிஷேக பூர்த்தியை முன்னிட்டு நவோத்தரசத சங்காபிஷேகம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

மறுநாள் சனிக்கிழமை இரவு ரதபவனி இடம்பெற்றது.

நாயன்மார்கட்டு கலாநிதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியாரின் அருளாசியுடன் அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடாதிபதி கிரியா கலாநிதி ஸ்ரீஐயப்பதாஸன் சாம்பசிவ சரவணபவக்குருக்கள் தலைமையில் கிரியைகள் நடைபெற்றன. [ச]

### சித்திரத் தேர்

புங்குடுதீவு பாணாவிடை சிவன் தேவஸ்தானத்தில்பத்து இலட்சம் ரூபா செலவுத் திட்டத்தில் சித்திரத் தேர்வேலை துரிதமாக நடைபெற்று வருகின்றது.

தேர்த் திருப்பணிச் சபைத் தலைவர் டாக்டர் ஆ. பேரின்பநாதன், செயலாளர் பொன் வைரமுத்து, பொருளாளர் இ. வைத்திலிங்கம். நிர்வாக ஆலோசகர் ஈ. எஸ். உதயகுமார் முதலியோர் 1990ஆம் ஆண்டில் சித்திரத்தேரின்வெள்ளோட்டம் அமைய வேண்டும் என்று ஆவலுடன் இந்தவேலையைக் கவனித்து வருகின்றனர் என அறிவிக்கப்படுகிறது. [க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடிக்கையாளர்களே !

முக்கால், ஒன்று, ஒன்றரை, இரண்டு மில்லி மீற்றர் ரேலர் மடி நூல் வகைகளையும்- போயா, வலை நூல் வகைகளையும்-கடற்றொழில் உபகரணங்களையும் மலிவு விலையில் வாங்க நாடவேண்டிய ஸ்தாபனம்,

**சென். அன்ரனீஸ்**
40. கடற்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

# உதயன்

16- 05 - 1989 செவ்வாய்க்கிழமை

**ஜோண்சன் Johnson**
[10 H. P.]

வெளியிணை இயந்திரங்களையும், உதிரிப் பாகங்களையும் மலிவு விலையில் வடபகுதியில் கொள்வனவு செய்யக்கூடிய ஒரே இடம் :

**சென். அன்ரனீஸ்**
40. கடற்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்

## கோட்டக்கல்வி நிலையங்கள் இவ்வாரத்தில்

யாழ்ப்பாணம், மே 16

யாழ். மாவட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ள ஐந்து கோட்டக்கல்வி நிலையங்களும் இம்மாத முடிவுக்குள் இயங்க ஆரம்பிக்கும்.

இரண்டு கோட்டக்கல்வி நிலையங்கள் இயங்க ஆரம்பித்துள்ளன.

எதிர்வரும் 19 ஆம் திகதி மருதனுமடம், பண்டத்தரிப்பு கோட்டக்கல் ? நிலையங்கள் இயங்க ஆரம்பிக்கும்.

எதிர்வரும் 24 ஆம் திகதி யாழ். கோட்டக்கல்வி நிலையம் இயங்க ஆரம்பிக்கும்.

[ஒ 3]

## பல்கலைக்கழக மாணவர் காணமற் போவது குறித்து கண்காணிக்க குழுநியமனம்

கொழும்பு, மே 16

பல்கலைக்கழக மாணவர் கைதாவது விடுதலை செய்யப்படுவது மற்றும் மாணவர் காணமற் போவது சம்பந்தமாக கண்காணிக்க உயர் கல்வி அமைச்சர் சாகுல் ஹமீது குழு ஒன்றை நியமித்திருக்கிறார்.

இக்குழுவிற்கு ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் ஓ. எஸ். எம். செனவிரத்ன தலைவராக இருப்பார். பிரதித் தலைவராக சட்டத்தரணிகள் சங்கத்தலைவரான திரு. டெஸ்மண்ட் பெர்ணண்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

பல்கலைக்கழக மாணவர் சம்மேளனத்தின் இரு உறுப்பினர்கள் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கசம்மேளனத்தின் இரு உறுப்பினர்கள், மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், பல்கலைக்கழக மாணவ பெற்றோர் சங்கம் ஆகியவற்றின் தலா இரு உறுப்பினர்கள் இக்குழுவில் இடம்பெறுவர்,

கண்காணிப்புக் குழுவின் தலைவருக்கு பொலீஸ் நிலையம் மற்றும் இராணுவ முகாம்களுக்கும் சென்று விசாரிக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அவசியமான விடத்து ஹெலிக்கொப்டர் வசதியைப் பாவிக்கவும் தலைவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

(ஒ-எ)

## மணமகளின் வீட்டுக்கு மணமகனைத் தேடி வந்த எமன்!

மணமகன் ஒருவரை அவரது மணமகள் வீட்டுக்குத் எமன் தேடி வந்து இரையாக்கிய பரிதாபச் சம்பவம் திஸ்ஸமஹரகமவில் இடம்பெற்றது,

திஸ்ஸமஹரகமவில் உள்ள ஒரு கிராமம் பன்னேகமுவ.

மணமகள் வீடு இ. போ. ச கதிர்காமம் டிப்போவில் கண்டக்டராகப் பணிபுரிந்த எ. ரி. ஆரியசேன என்பவர் மணமகனாக அங்கு வந்து இறங்கினார்.

விவாதப்பதிவாளரும் வந்துவிட்டார். உறவினர்கள் புடைசூழ மணமகன் மணமகள் திருமணப்பதிவில் கைச்சாத்திட அமர்ந்திருக்கின்றனர்.

அந்த நேரம்இரண்டுஇளைஞர்கள் அங்கு வந்துஇறங்கினர். யார் ஆரியசேன என்றுஅங்கிருந்தவர்களை இளைஞர் விசாரித்தனர். அடையாளம் காட்டப்பட்ட ஆரியசேனவை வெளியே வருமாறு இளைஞர்கள் அழைத்தனர்.

உறவினர்களையும் நண்பர்களையும் அந்த இளைஞர்கள் அறை ஒன்றினுள் இருக்கும்படி உத்தரவிட்டனர்.

சில நிமிடங்கள் சுழித்துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்டது.

அதைத்தொடர்ந்து வெளியே ஓடினர். அங்கு இரத்த வெள்ளத்தில் மணமகன்கிடந்தார். அவரது உயிர் பிரிந்திருந்தது. (ஒ-எ)

## மரண அறிவித்தல்கள்

### திரு. வேலு ஆறுமுகம்

வடலியடைப்பைச் சேர்ந்த திரு. வேலு ஆறுமுகம் 14- 5- 89 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமெய்தினார்.

அன்னார் செல்லாச்சியின் அன்புக்கணவரும், காலஞ் சென்ற நமசிவாயம், காலஞ்சென்ற கார்த்திகேசு, காலஞ்சென்ற கனகசபை (சிங்கப்பூர்), காலஞ்சென்ற வைத்திலிங்கம் (சிங்கப்பூர்), காலஞ்சென்ற மாணிக்கம் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற தங்கமுத்து, காலஞ்சென்ற பரமலிங்கம், காலஞ்சென்ற நாகலிங்கம், கந்தையா, சுப்பிரமணியம் சிவக்கொழுந்து, சின்னையா, காலஞ்சென்ற அன்னம்மா, காலஞ்சென்ற சின்னம்மா, பொன்னம்மா, காலஞ்சென்ற கண்ணம்மா, அருமைத்துரை பாக்கியம், பொன்னையா ஆகியோரின் அருமைத் தகப்பனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் வடலியடைப்பில் உள்ள அவரது இல்லத்தில் 16- 5- 89 செவ்வாய்க்கிழமை நடைபெற்று தகனக்கிரிகைகளுக்காக பூதவுடல் விளாவெளி மயானத்திற்கு காலை 10 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகிய அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்,
**ஆ. அருமைத்துரை.**

வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு. (500)

## மரண அறிவித்தல்கள்

### திரு. B. A. சிறில் இம்மனுவேல்

(ஓய்வுபெற்ற லிகிதர் - யாழ் கல்வித் திணைக்களம்)

யாழ்ப்பாணம் ஸ்ரேசன் சந்தியைப் பிறப்பிடமாகவும் ஊறணி காங்கேசன்துறையை வதிவிடமாகவும் கொண்ட திரு. B. A. சிறில் இம்மனுவேல் அவர்கள் 13 – 05 – 1989 இல் காலமானார்.

அன்னாரின் பூதவுடல் 16 - 05 – 1989 செவ்வாய்க்கிழமை இன்று காலை. 9.00 மணிக்கு காங்கேசன்துறை ஊறணி புனித அந்தோனியார் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
**திரு. ம செபஸ்தியாம்பிள்ளை.**

ஊறணி, காங்கேசன்துறை. (10941)

### திருமதி நல்லம்மா சரவணமுத்து

திருமதி நல்லம்மா சரவணமுத்து கோண்டாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. சிவசம்பு சரவணமுத்து (இளைப். அதிபர், சைவ மகாஜன மகா வித்தியாலயம் இணுவில்) வின் அன்பு மனைவியும், திருமதி சுந்தரேஸ்வரி கணேசன் (லண்டன்), திரு. S. S. பாலச்சந்திரன் (Director, Department of Animal Production and Health, NE Provincial Council, Trincomalee), திருமதி மகேஸ்வரி ஸ்ரீபதி, Dr. S. குகதாசன் (Consultant Eye Surgeon, Teaching Hospital, Jaffna) திரு. S. சிவநேசன் (A. I. Department of Agrarian Services, Killinochchi & Jaffna), திருமதி ஜெகதீஸ்வரி சிவலோகநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. M. P. கணேசன் (Radio Grapher, London), திருமதி இந்திராணி பாலச்சந்திரன் (ஆசிரியை, புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி), திரு. க. ஸ்ரீபதி (Retd. Tea Commissioner's Dept.), திருமதி கலைவாணி குகதாசன், திருமதி நிர்மலாஜினி சிவனேசன், திரு. வி. சிவலோகநாதன் (ஆர்த்தி ஜுவலர்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

மரணச்சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல் :
**பிள்ளைகள்**

ஞானவைரவர் ஒழுங்கை,
கோண்டாவில் கிழக்கு. [10944]

### திருமதி கிரேஸ் புஸ்பராணி தேவதாசன்

(இளைப்பாறிய ஆசிரியை)

திருமதி கிரேஸ் புஸ்பராணி தேவதாசன் (இளைப்பாறிய ஆசிரியை) காலமாகிவிட்டார்.

இவர் ஓய்வுபெற்ற அதிபர் திரு. தேவதாசன் அவர்களின் அன்பு மனைவியும், தேவபுஸ்பம், தேவநற்கருணை (ஜேர்மனி), தேவசந்திரன் (கனடா), தேவதயாநிதி, தேவஅரசி (டென்மார்க்), தேவதயாளன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி இராசமணி இராசசிங்கம் (இளைப்பாறிய ஆசிரியை), திருமதி மனோன்மணி சேனாதிராஜா இளைப்பாறிய ஆசிரியை), திரு. க. பரராஜசிங்கம் (இளைப்பாறிய காப்புறுதிக் கூட்டுத்தாபன ஊழியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், வண. V. N. தர்மகுலசிங்கம், இ. அற்புதராசா, J. S. போல் (டென்மார்க்), ராஜினி தேவநற்கருணை (ஜேர்மனி), சாந்தரூபராணி தேவசந்திரன் (கனடா), சரோஜினி தேவதயாளன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், சாம், டானியல், தர்ஷா, நிஷாந்தன், நியோமி, கிறிஸ்றீனா, கொலின், லியோமி, லியோன், டிலோ, ஜெருல்ட் ஆகியோரின் அருமைப் பேத்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை அவரது இல்லத்தில் 16-05-1989 இன்று மாலை 3-30 மணிக்கு நடைபெற்று ஏழாலை வடக்கு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**K. I. தேவதாஸன்**

ஏழாலை வடக்கு,
ஏழாலை. [10942]

## அஞ்சலி

யாழ்ப்பாணம், மே 16

கடந்த ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலி சிவன்கோவில் பகுதியில் இடம்பெற்ற மோதலின்போது சயனைட் அருந்தி மரணமானவர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த டெஸ்மன் (ரமேஸ்—திருமலை) எனத் தெரிவிக்கப்பட்டது.

அவருக்கு அஞ்சலி தெரிவித்து அந்த இயக்கம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

## வங்கிகளில் கொள்ளை

கொழும்பு, மே 16

மொறவக்க பொலீஸ் பிரிவுக்கு உட்பட்ட மூன்று கிராமிய வங்கிகள் இனந்தெரியாத நபர்களினால் கொள்ளையிடப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## பஸ்ஸில் கிடந்த சடலங்கள்

கொழும்பு, மே 16

மாத்தறை, வெலிகம பகுதியில் அனாதரவாக வீதியோரத்தில் கைவிடப்பட்டிருந்த தனியார் பஸ் ஒன்றினுள் இருந்து மூன்று பேரின் சடலங்கள் கண்டு எடுக்கப்பட்டன.

பஸ்ஸின் சாரதி காயங்களுடன் வெலிகம மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

(ஒ-எ)

## தொடர்ந்து மூடப்பட்ட நிலையில்

வடமராட்சி, மே 16

பருத்தித்துறையில் வர்த்தக நிலையங்கள் நேற்றும் தொடர்ந்து மூடப்பட்டிருந்தன.

இராணுவத்தினரின் பணிப்புரை ஒன்றை நிறைவேற்ற இயலாத நிலையில் கடந்த சனிக்கிழமை தொடக்கம் பருத்தித்துறையில் கடைகள் அனைத்தும் மூடப்பட்டிருப்பது தெரிந்ததே.

அன்றாடம் பாவனைப் பொருள்களை வாங்க முடியாமல் மக்கள் கஷ்டமுறுகின்றனர். (அ-160)

## பத்தாவது ஆண்டு விழா

யாழ்ப்பாணம், மே 16

இலங்கை இந்து இளைஞர் பேரவையின் பத்தாவது ஆண்டு விழா எதிர்வரும் 20 ஆம், 21 ஆம், 22 ஆம் திகதிகளில் நடைபெற உள்ளது.

நல்லூர், மங்கையர்க்கரசி வித்தியாசாலையில் மாநாடும்; ஆய்வரங்கும் நடைபெற உள்ளன.

நிகழ்ச்சிகள் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். மாநாட்டுக்கு திரு. வ. முருகப்பன் தலைமை வகிப்பார். (ஒ-3)

## மதிய உணவில் நஞ்சு:
## பேக்கரி உரிமையாளர் மூவர் பொலீஸாரால் கைது

பாடசாலை மாணவருக்கான மதிய உணவில் நஞ்சு கலந்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக பொலீஸார் மூன்று பேக்கரி உரிமையாளரையும் ஒரு வர்த்தகரையும் கைது செய்தனர்.

இச் சம்பவம் மதவாச்சிப் பகுதியில் உள்ள நொச்சியாகம வித்தியாதர்ச மகாவித்தியாலயத்தில் இடம் பெற்றது. இது பற்றியசெய்தி ஏற்கனவே உதயனில் வெளிவந்ததுதெரிந்ததே.

சம்பந்தப்பட்ட பேக்கரிகளை உடனடியாக மூடும்படி உத்தரவிடப்பட்டது. சந்தேக நபர்கள் அனுராதபுரம் நீதிவான் முன் ஆஜர் செய்யப்படவிருந்தனர். [ஒ-எ]

## சீனி விலையை உயர்த்த காரணம் எதுவுமில்லை
### இறக்குமதியாளர் சங்கம் தகவல்

யாழ்ப்பாணம், மே 15

சீனியின் ஆககூடிய சில்லறை விலை ஒருகிலோவுக்குக் ரூபா 22 சதம் 70 ஆகும் என்று இலங்கை சீனி இறக்குமதியாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

சீனி கையிருப்பு மற்றும் விலைகள் சம்பந்தமாக மேற்படி சங்கம் விடுத்துள்ள அறிவித்தலில் தெரிவித்துள்ளதாவது :-

இலங்கை முழுவதுமுள்ள எம் அங்கத்தவர்கள், மொத்த வியாபார முகவர்கள், கையிருப்பாளர்களிடம் போதியளவு சீனி கையிருப்பில் உண்டு. நியாயமற்ற எந்தவொரு விலை அதிகரிப்புக்கோ, அல்லது எந்தவித பற்றாக்குறை ஏற்படவோ காரணம் இல்லை.

மொத்தவிலை கொழும்பில் ஒரு கிலோவுக்கு 21 ரூபா அறுபது சதமும் (21-60), வெளியூர்களில் 21 ரூபா எழுபது சதமும் (21-70), சில்லறை விலை கொழும்பில் 22 ரூபா 60 சதமும் (22-60), வெளியூர்களில் 22 ரூபா எழுபது சதமும் (22-70) விற்கவேண்டும் என்று அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-3)

## சம்பளம் வாங்க ஜெயலலிதா மறுப்பு

சென்னை, மே 15

அரசு அளிக்கும் சம்பளம் மற்றும் அலவன்ஸ் தொகையை வாங்க எதிர்க்கட்சித்தலைவர் ஜெயலலிதா மறுத்துள்ளார்.

இது தொடர்பாக சபாநாயகர் தமிழ்க்குடிமகனுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

எம். எல். ஏக்கள், துணை சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர் சம்பளங்களை அரசு உயர்த்தியுள்ளது. இதில் எதிர்க்கட்சித் தலைவரின் சம்பளம் ரூபா 1,700 இருந்து ரூபா 1,900 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அரசின் இந்த அறிவிப்பு சட்டசபையில் கல்வி அமைச்சர் அன்பழகனால் வெளியிடப்பட்டது.

அரசு தரும் சம்பளம் வேண்டாம் என ஜெயலலிதா அறிவித்துள்ளார். சபாநாயகர் தமிழ்க்குடிமகனிடம் இது தொடர்பான ஜெயலலிதாவின் கடிதத்தை திருநாவுக்கரசு கொடுத்தார். இதற்கான காரணம் ஏதும் கடிதத்தில் குறிப்பிடப்படவில்லை.

பின்னர் செய்தியாளரிடம் திருநாவுக்கரசு கூறியதாவது:

சட்டசபை உறுப்பினராகப் பதவியேற்ற நாளிலிருந்து ஜெயலலிதா சம்பளம் மற்றும் அலவன்ஸ் தொகை பெறுவதை விரும்பவில்லை.

இவ்வாறு திருநாவுக்கரசு கூறினர். கடந்த மார்ச் மாதம் 25 ஆம் தேதி சட்டசபை சம்பவத்தை அடுத்து ஜெயலலிதா சட்டசபைக்குச் செல்வதை முற்றிலும் தவிர்த்துள்ளார். முதல்வர் கருணாநிதி பதவியிலிருந்து ராஜினாமாச் செய்யும்வரை சட்டசபைக்கு வரமாட்டேன் எனவும் ஜெயலலிதா அறிவித்திருந்தார்.

## சுட்டுக்கொலை

மண்டூர் கிராமத்தில் நான்கு குழந்தைகளின் தந்தை ஒருவர் இனந் தெரியாத நபர்களால் அண்மையில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பி. சின்னராஜா [29] என்பவரே மேற்படி நபராவார்

[ஒ-21]

## யாழ் குடா....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி]

திரும்பினர்.

கிராமப்புறப் பாடசாலைகள் சிலவற்றில் மாணவர்களுக்கு மதிய போசனம் வழங்கப்பட்ட பின் அவர்கள் வீடு திரும்பியதாக அறியவந்தது.

★ கைதுசெய்யப்பட்ட மாணவர்களை உடனடியாக விடுவிக்கவும்.

★ மாணவர் உரிமைகள் பேணப்படவேண்டும்.

★ கல்விக்கூடங்களில் ஆயுதந் தரித்தோர் உட்புகுதல் தடைசெய்யப்படவேண்டும்.

★ கொலை செய்யப்பட்ட மாணவர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படவேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகளை முன்வைத்தே பாடசாலைப் பகிஷ்கரிப்பு ஏற்பாடு செய்யப்படுவதாக இது சம்பந்தமான துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

### திரு. சலமோன் - லோறன்ஸ்

மண்டைதீவு 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சலமோன் லோறன்ஸ் காலமானார். அன்னார் பாக்கியத்தின் அன்புக்கணவரும் அலெக்ஸாண்டர் [உரிமையாளர் நியூட்டன் ரேட் சென்ரர் யாழ்ப்பாணம்], யோசப் [உரிமையாளர் AJM ரெக்ஸ்ரைல்ஸ், யாழ்ப்பாணம்], உத்தமசீலி, ஞானசீலி, மரியதாஸ் (இத்தாலி) ஜெயசீலி, அமலசீலி ஆகியோரின் அன்புத் தந்தையும், மேரி மற்றில்டா, அருள்மேரி, அந்தோனிப்பறநாந்து, செபஸ்தியாம்பிள்ளை, லீமாறேஸ் ஆகியோரின் மாமனும் ஆவர்.

அன்னாரின் பூதவுடல் செவ்வாய்க்கிழமை (16 – 05 – 1989) இன்று காலை 10 மணியளவில் மண்டைதீவு புனித பேதுருவானவர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**L. அலெக்ஸாண்டர்.**

(602)

### சிதம்பரப்பிள்ளை கந்தையா

கரம்பன் மேற்கைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிஸ் சிதம்பரப்பிள்ளை கந்தையா 13 – 5 – 89 அன்று காலமாகிவிட்டார். இவர் அரியலெட்சுமியின் அன்புக் கணவரும், சியாமளாதேவி (ஜேர்மனி), கோமளாதேவி (பிரான்ஸ்), ஸ்ரீகாந்தா (கனடா), பத்மா ஸ்ரீதரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்ற பத்மநாதன் குலேந்திரன், (பிரான்ஸ்), குமாரி (கனடா), மனோறதன் (R.A.F.) ஆகியோரின் அன்பு மாமனாரும், திவாகரன், ஜெயகரன், ஜனகன், மயூரன், டனுஷன், சுஜீபன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரிகைகள் 16-05-89 செவ்வாய்க்கிழமை இன்று பி ப. 3-00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கரம்பன் மேற்கு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
**பொ. பேரம்பலம்**
(மைத்துனர்)

கரம்பன் மேற்கு,
ஊர்காவற்றுறை. [10945]

### சூசைப்பிள்ளை கிறிஸ்தோப்பர்

இளைப்பாறிய மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர் சூசைப்பிள்ளை கிறிஸ்தோப்பர் 14-5-89 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற சூசைப்பிள்ளை நேசமுத்து ஆகியோரின் அன்புப் புதல்வரும் கத்தரீனம்மாவின் அன்புக் கணவரும் எட்வேட் பங்கிறுஸ் (ப. நோ. கூ. ச. பண்டத்தரிப்பு) றொபேட் பங்கிறுஸ் (பாறின்) றுபேட் பங்கிறுஸ் (காலஞ் சென்ற பொலீஸ் உத்தியோகத்தர்) அல்பேட் பங்கிறுஸ் (சுவிற்சலாந்து) மேரி ஜெயநாயகி வில்பேட் பங்கிறுஸ் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், றேஸ் திரேசம்மா ஸ்ரனிஸ்லாஸ் (உல்லாசப் பிரயாண கூட்டுத்தாபனம்), சறோ, ருகினி, வலன்ரீனா, ஆகியோரின் அன்பு மாமனாரும், டயனா, டெறிக், பன்செழியன், பன்கஜன், பிரகாஷ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரது நல்லடக்கம் சில்லாலை சென் ஜேம்ஸ் சேமக்காலையில் இன்று 16-5-89 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
**எட்வேட் பங்கிறுஸ்**

அம்மன் வீதி,
பண்டத்தரிப்பு. (531)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இல் உள்ள அச்சகத்தில் 16—05—1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது